REGISTERED No. M. 6165. அணா 2

1362

# பத்ஹுல் இஸ்லாம்

1362
4 — 56

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

30 DEC 1954

ஜனவரி 1955.

| விஷயம். | பக்கம். |
|---|---|
| நன்மை புரிந்து, தீமை விலக்குவோம்; வாரீர், வாரீர்! ... ... ... ... | 1 |
| ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு டி. எப். ஆர். மஆலி சாஹிபு (பாகவி) ... | 9 |
| திருக்குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி) ... ... ... ... | 14 |
| இரத்தச் சின்னம் (தொடர்கதை) ... ... | 19 |
| காஜா நிஜாமுத்தீன் ஔலியா ஜீவிய சரித்திரம் (...ம் பேட்டை S. அப்துல் ரஜாக் சாஹிப்) | 28 |

... இஸ்லாம் ஆபீஸ் :
... 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

ஜL
ஜனவரி, 1954 FI
1955
187038

# பத்ஹுல் இஸ்லாம்

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

முதல் பதிப்பு

திருச்சி

ஹஸ்ரத் நத்ஹர் அவ்லியா

அவர்களின் சரித்திர சுருக்கம்.

இஃது

அய்யம்பேட்டை

S. அப்துல் ரஸாக் ஸாஹிப் அவர்களால்

உர்தூவிலிருந்து சுத்தத் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

விலை அணா. 8

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது ஸண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

الإسلام

# பத்ஹுல் இஸ்லாம்.

ஜனவரி—1955.

---

## நன்மை புரிந்து, தீமை விலக்குவோம்; வாரீர், வாரீர் !

**ந**ன்மையான காரியத்தைக் கொண்டு மக்களுக்கு கட்டளை யிடுவதற்கும், தீமையான காரியத்தை புரியாதீர்கள் என்று பொது மக்களை விலக்குவதற்கும், மனித சமுதாயத்தில் சில முக்கியஸ்தர்கள் தோன்ற வேண்டும் என்பது இறைவனால் இயற்றப்பட்ட இயற்கைச் சட்டமாகும்.

இந்தப் பொது நியதியை யொட்டி இறைவன், திருவேதமாகிய குர்ஆன் ஷரீபில் 24 ஆயத்துகளிலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருச்சமுகத்தில் 15 ஹதீதுகளிலும் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன.

இக்காலை எங்கும் தப்லீக் பிரசாரம் புரியப்பட்டு வருகிறது. அறிஞர்களும் ஆலிம்களும் தலைவர்களும் சிரமம் பாராமல் ஊர்கள் தோறும் மஹல்லாக்கள் தோறும் சென்று, பள்ளிவாசல்களிலும் பொது இடங்களிலும் பாமர மக்களுடன் பழகிப் பேசி, அவர்கட்கு அல்லாஹ்வின் கட்டளைகளை எடுத்தோதி, சத்திய சன்மார்க்கமாகிய இஸ்லாமிய சம்பிரதாயத்தின் பக்கம் அழைத்து வருகிறார்கள். சில இடங்களில் பொதுக் கூட்டம் போட்டும், மகாநாடு கூட்டியும் 'தப்லீக்' என்னும் பெயரால் திருப்பிரசாரம் செய்து வருகிறார்கள். இதனால் எத்தனையோ பாமர மக்கள் இஸ்லாத்தை அறிந்து இறைவனின் கட்டளை யென்ன, திரு நபி நாயகம் (ஸல்) அவர்களின் போதனை என்ன வென்பதைத் தெரிந்து கொண்டு ஒழுகி வருகிறார்கள்.

இந்தத் தப்லீக் பிரசாரம் பாராட்டத் தக்கதாகும். இவ்விதப் பிரசாரம் செய்வோரை ஊர்க்காரர்களும் பிரமுகர்களும் ஆதரிக்க வேண்டியது அவசியமாகும். பொதுஜன சேவை புரிய வெளிக் கிளம்பும்

ஊழியர்கள் பெரும்பாலும் ஏழை எளிய அறிஞர்களும் ஆலிம்களுமே யாவர். இவர்கள் தங்கள் ஜீவனோபாயத்துக்கு வழி தேடுவதையும் விட்டுவிட்டு, அல்லாஹ் ரஸூலின் கட்டளைகளை சிரமேற் கொண்டு பொதுப் பணியாற்ற கிளம்பி விடுகிறார்கள். ஊர்கள் தோறும் சென்று பட்டினியும் பசியுமாயிருந்துங்கூட இஷாஅத் வேலை செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட எளிய ஆலிம்களையும் உத்தம தலைவர்களையும் ஆதரிக்க வேண்டியது முஸ்லிம் சமூகப் பிரமுகர்களின் கடமையாகும்.

## சிறந்த சமூகம் நாம்.

திருக் குர்ஆன் 'ஆல இம்ரான்' ஸூராவில் ஒரு திருவாக்கியம் இருக்கிறது. அது :—

“ஜனங்களுக்கு நன்மையைக் கொண்டு ஏவுவதாலும், தீமையை விட்டும் அவர்களை விலக்குவதாலும், அல்லாஹ்வினிடம் விசுவாசம் கொண்டிருப்பதனாலும் (முஸ்லிம்களே) நீங்கள், சமூகங்களில் சிறந்தவர்களாய் (கைர உம்மத்தாக) ஆக்கப்பட்டீர்கள்” என்பதே அந்தத் திருவாக்கியம்.

இக்காலை உலகில் எத்தனையோ சமூகங்கள் இருக்கின்றன. அவற்றில் எது சிறந்த சமூகம் என்பதை எவராலும் வரையறுத்துக் கூற இயலுவதில்லை. உலகில் அமெரிக்காவே சிறந்த தேசம் என்று சொல்லப் படுகிறது. ஏனெனில், நவநாகரீகத்திலும் நடையுடை பாவனையிலும், வாழ்க்கை முறையிலும், வர்த்தகத் துறையிலும் கடலிலும் வானிலும் தரையிலும் முவ்வகையான பேராதிக்கம் பெற்றிருப்பதிலும் அமெரிக்கர்களே முன்னால் இருப்பதால், அமெரிக்க சமூகமே சிறந்த சமூகம் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

மற்றொரு பக்கம் ரஷ்யா தேசத்தினர் இருக்கிறார்கள். அவர்கள் மக்களை சுபிக்ஷமாக வாழச் செய்யும் வழிகளில் முன்னேறி விட்டதாகச் சொல்லப்படுகிறது. அதாவது மனிதரில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசமின்றி, ஏழை பணக்காரன் என்ற வேறுபாடின்றி, சரி சமத்துவமாய் ரஷ்யர்கள் வாழ்கிறார்களாம். அதனால் ரஷ்யர்கள் சிறந்த சமுதாயத்தினர் என்று சமத்துவ வாதம் பேசும் தோழர்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

இவ்வாறே அந்தக் கோடியில் அரபு பேசுவோரும், இந்தக் கோடி தமிழ் பேசுவோரும் பரஸ்பரம் தாங்களேதான் சிறந்த சமூகம் என்று வாய்ப்பறையறைந்து கொள்கின்றனர். மற்ற பாஷைக்காரர்களும் மற்ற நாட்டவரும் கூட இவ்வாறே தாங்களே சிறந்த சமூகம் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

187038

ஆம். சிலர் நாகரீகத்தில் சிறந்தவர்கள், சிலர் நடையுடை பாவனையில் சிறந்தவர்கள், சிலர் மொழியில் சிறந்தவர்கள், சிலர் உடல் சுத்தத்திலும் ஆத்ம சுத்தத்திலும் சிறந்தவர்கள்—என்று இவ்வாறு ஒவ்வொரு சாராரும் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

## சிறப்பின் லக்ஷணம் யாது?

சமூகங்களில் சிறந்த வர்க்கம் யார் என்பதை எப்படி வரையறுத்துக் கூறுவது? அதற்கோர் உரைகல் வேண்டும், துலாக்கோல் வேண்டும். படிக்கல் வேண்டும், அனுமானம் வேண்டும். அதென்ன?

மாட மாளிகையில் வசிப்பதால் ஒருவன் உயர்ந்தவனாக கருதப்பட மாட்டான். அழகாக உடை உடுத்துக் கொண்டு திரிவதனாலும் ஒருவன் உயர்ந்தவனாகிவிட மாட்டான். இனிய ஆகாரம் உண்பதனால் ஒருவன் சிறந்தவனாகிவிட மாட்டான். வாக்கு சாதுர்யமாய் பேசித் திரிவதால் ஒருவன் உத்தமனாகிவிட மாட்டான்.

ஆயின், மனிதனின் லக்ஷணம் என்ன? சிறந்த சமூகத்தின் லக்ஷணம் யாது? இதை மனிதர்களாகிய நாமே எப்படி தீர்மானித்துக் கொள்ள முடியும்? இவ்வுலகையும் சர்வ சராசரங்களையும் சிருஷ்டித்த எல்லாம் வல்ல இறைவன் தன் திருமறையில், சமூகங்களில் சிறந்த வர்க்கம் யார்? என்பதை திட்டவட்டமாக எடுத்துக் கூறிவிட்டான்.

"எவர் தெய்வ நம்பிக்கையும் நல்லொழுக்கப் பண்பாட்டும் உடையவராக யிருந்து, தம்மைச் சேர்ந்த மனித சமூகத்தினர் உய்வான் வேண்டி, நல்ல காரியங்களைக் கொண்டு அவர்களுக்கு இதோபதேசக் கட்டளை புரிந்து, தீமையான பாபச் செயல்களை விட்டும் அவர்களைத் தடுத்தாட் கொண்டு, நற்சேவை செய்து உலகத்துக்கு உபகாரிகளாக புனித வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்களோ அவர்களே, சமூகத்தில் சிறந்த 'கைர உம்மத்' ஆவார்கள்."

## பேரின்பம் அடைய வழி.

"தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று ஒரு வேதாந்த ஞானி கூறிப்போயுள்ளார். இன்பத்தில் பேரின்பம் தான் சிறந்தது. உண்பதனாலும் உடுப்பதனாலும் சுகிப்பதனாலும் உண்டாகும் இன்பங்களெல்லாம் சிற்றின்பங்கள். இவை சரீரம் சம்பந்தப் பட்டவையே யாகும். ஆனால் பேரின்பம் என்பது, ஆன்ம பூர்வமானது. மனத்தாலும் அறிவாலும் உணரத்தக்கது. அப்படிப்பட்ட இன்பம் நற்குண நல்லொழுக்கத்தால் தான் உண்டாகும்.

ஒருவன் தெய்வத்தின் மீது திடமான நம்பிக்கை கொண்டு, அந்தியும் சந்தியும் ஆண்டவனைத் தொழுது, பிறர் மனம் கோணாமற்படி

நடந்து, நல்ல காரியங்களை செய்யும்படி பிறர்க்கு நல்லுபதேசம் செய்து, பாபச் செயல்களை கிஞ்சித்தும் புரியாதீர்கள் என்று எளியோர்க்கு எச்சரித்து, எல்லோரும் தன்னைப் போல் உத்தமர்களாய் இருக்க வேண்டு மென்ற உயர் பெரு இலக்ஷியத்துடன் நடந்து கொள்வானுனல், அதனுல் அவன் அடையும் ஆத்மத் திருப்தியே பேரின்பம் ஆகும்.

இத்தகைய பேரின்பத்தை, தன்னைப் போல் எல்லோரும் பெற்றுய்ய வேண்டும் என்று தான் அந்த ஞானி விரும்பி யிருக்கிறுர். ஆகவே, அத்தகைய இன்பம் பெறும் வழியை ஆதியிலேயே ஆண்டவன் தன் திருக்குர்ஆன் மூலம் நமக்குக் காட்டிக் கொடுத்திருக்கின்றுன். அதுதான், தானும் நல்லவனுக யிருந்து, பிறரையும் நல்ல வழிக்குத் திருப்பும் திருப்பணிச் சேவையாகும்.

## முஸ்லிம்களின் பெருமை.

முஸ்லிம் பாமரர்களில் பலர், தாங்கள் முஸ்லிம்களாக இருப்பதையே ஒரு பெருமையாக கருதிக் கொண்டிருக்கின்றனர். 'நாங்கள் தான் சமூகங்களி லெல்லாம் சிறந்த சமூகம்' என்று பெருமை யடித்துக் கொள்கின்றனர்.

முஸ்லிம் தாய் தந்தைக்குப் பிள்ளையாக ஒருவன் பிறந்து விடுவதாலேயே அவன் உண்மை முஸ்லிமாக விளங்கிவிட முடியாது. அவ்வாறே முஸ்லிம் சமூக ஜனக் கணிதத்தில் கணிக்கப்பட்டதனுல் மட்டும் அவன் சிறந்த சமூகத்தினனுய் விட முடியாது.

எத்தனையோ முஸ்லிம்கள் பெயரளவில் முஸ்லிம்களாகவும் இஸ்லாமானவர்களாகவும் இருக்கின்றனர். பொய் யுரைத்துக் கொண்டும், பாபக் கிருத்தியங்களில் சதா ஈடுபட்டுக் கொண்டும், பிறர்க்கு நாவாலும் கையாலும் தீங்கிழைத்துக் கொண்டும் இருக்கின்றனர். இப்படிப் பட்டோர், "நாங்கள் இஸ்லாமான பிள்ளைகள்; நாங்கள் தான் உலகில் சிறந்த சமூகத்தினர்" என்று பெருமை யடித்துக் கொள்ளலாமா? முஸ்லிம் தந்தைக்குப் பிறந்து விடுவதனுலும், முஸ்லிம் தெருவில் வசிப்பதனுலும், இஸ்லாமியப் பெயர் சூட்டிக் கொள்வதனுலும் மட்டும் ஒருவன், முஸ்லிமாக சிறந்த சமூகத்தவனுக ஆய்விடுவதானுல், அப்படிப் பட்டவனுல் லோகத்துக்கும் மனித வர்க்கத்துக்கும் என்ன பயன்?

## மாந்தரில் மூன்று வகை

"எவனுடைய காத்தாலும் நாவாலும் பிறருக்கு நன்மை உண்டாகிறதோ அவனே சிறந்தவன்; எவனுடைய நாவாலும் கைகளாலும் பிறருக்குத் தீங்கு உண்டாய்க் கொண்டிருக்கிறதோ அவனே மனிதர்களில் மகாக் கொடியவன்; எவனுடைய காத்தாலும் நாவாலும் பிறர்க்கு

எவ்வித நன்மையும் உண்டாக மாட்டாதோ அவன், ஒன்றுக்கும் உதவாத உலுத்தனவன்."

எனவே, சிறந்தவன்—தீயவன்—உலுத்தன் என்ற மூன்று வகையினர் இருக்கிறார்கள். மாந்தர்களிலே! ஒருவனால் உலகத்துக்குப் பிரயோஜனம் உண்டாகிறது. ஒருவனால் உலகத்துக்குப் பிரயோஜனம் உண்டாவதில்லை; ஒருவனால் உலகத்துக்கு தீங்கு உண்டாகிறது. இந்த மூன்று வகை மக்களில் நாம் எந்த இனத்தைச் சேர்ந்தவர் என்று ஒவ்வொருவரும் தம்மைத் தாமே சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இப்படி எவன் தன்னைத் தான் சீர்தூக்கிப் பார்த்து சீர்திருத்தம் அடைகின்றானோ அவனே வாழ்க்கையில் வெற்றி பெற்றவனாக விளங்குவான். அவனுக்கே இகத்தில் மனத்திருப்தியும், பரத்தில் ஆத்ம முக்தியும், இகபரத்தில் பேரின்பமும் உண்டாகும்.

## இஸ்லாமிய பிரசாரம் செய்வோம்.

முஸ்லிம்களுக்குரிய இஸ்லாமியக் கடமைகளிலொன்று, சத்திய பிரசாரமாகும். இதை தப்லீக் என்றும், இஷாஅத் என்றும் கூறுகின்றோம். இஸ்லாமிய சம்பிரதாயத்தில் இருக்கும் பாக்கியம் பெற்ற முஸ்லிம்கள் ஒவ்வொருவரும், தான் பெற்ற ஹிதாயத் என்னும் சன்மார்க்கத்தை பிறருக்கு எடுத்தோத வேண்டியது அவர்கள் மீது கடமையாகும்.

முஸ்லிம் சமூகம் இக்காலை உலகத்தில் மிகவும் வியாபித்துப் பரந்துப் பரவி, நற்காட்சி யளித்து வருகிறது. லண்டனில் மஸ்ஜித் உண்டு; முஸ்லிம்களும் இருக்கிறார்கள். பர்லினில் மஸ்ஜித் உண்டு; முஸ்லிம்களும் இருக்கிறார்கள். இவ்வாறே, ஜப்பானிலும், சீனாவிலும், ஆப்ரிக்காவிலும் மற்றும் எல்லா அந்நிய நாடுகளிலும் இஸ்லாமிய இளம் பிறைக் கொடியும் சின்னமும் இலங்கிக் கொண்டிருக்கின்றன.

இது மட்டுமல்ல; உலகில் தலை சிறந்த நாகரிக நாடு என்று பாராட்டப்படும் அமெரிக்காவில் கூட, ஓர் அழகான மஸ்ஜித், பல லக்ஷம் டாலர்களில் கட்டி முடிக்கப்பட்டு, வானுற ஓங்கி வளம் பெற நின்றிலங்கிக் கொண்டிருக்கிறது.

இந்த பாக்கிய மெல்லாம் முஸ்லிம் சமூகத்துக்கு எப்படி உண்டாய் விட்டது! மக்களில் சிறந்தவர்கள், அல்லாஹ்-ரஸூலின் கடமையை சிரம் மேற் கொண்டு, தூர தூர தேசங்களுக் கெல்லாம் போய், இஸ்லாமிய வளர்ப்பிரசாரம் என்னும் இஷாஅத்தும் தப்லீகும் புரிந்து வந்ததனாலேயே அன்றோ! ஆகையால், இஸ்லாமியக் கடமைகளில் பிரசாரமும் ஒரு முக்கியக் கடமையாகும். ஒவ்வொரு முஸ்லி

மும் அவரவர் சக்திக்கேற்ப இஷாஅத்து-தப்லீக் வேலையை செய்து வரத்தான் வேண்டும்.

## இஸ்லாம் ஒரு பூங்காவனம்.

"குல்ஷனே இஸ்லாம்" என்பது நம் சன்மார்க்கப் பூஞ்சோலையாகும். "முஸ்லிம் சமூகம் ஒரு பூந்தோட்டம். அதில் நாமெல்லோரும் புல்புல் பட்சிகள்" என்று மகாகவி சர் முஹம்மத் இக்பால் (மர்ஹூம்) பாடியிருக்கின்றார். அந்தப் பாட்டின் உட்கருத்தை ஊன்றிப் பாருங்கள்.

ஒரு பூந்தோட்டம் செழித்து வளம்பெற வளர்ந்தோங்க வேண்டுமானால் அதற்கு என்ன செய்ய வேண்டும்? அதற்கு என்னனென்ன சௌகர்யங்கள் தேவை?

செடி வைத்தால் அதற்கு தண்ணீர் ஊற்ற வேண்டும். அது வளர்ந்தால் அதை ஆடு மாடுகள் மேய்ந்து விடாதபடி பாதுகாக்க வேண்டும். கொடி படர்ந்தால், அது தரையில் விழுந்து மிதிக்கப்பட்டு நசித்துப்போகாதிருக்க, அதற்கொரு கொழுகொம்பு ஊன்ற வேண்டும். கொடி படர்ந்து வியாபித்து விட்டால், அதற்கு பந்தல் போட வேண்டும்.

இப்படியெல்லாம் செய்தால் தானே பூங்காவனம், வளம் பெற்று சிறப்புடன் விளங்கும். அப்படி விளங்கினால் தானே அங்கு 'புல்புல்' பட்சிகள் வந்து, கூடிக்குலவி இனி கீதம் பாடி இன்புற்று வாழும்.

பூஞ்செடிக்கு தண்ணீர் ஊற்றாமல், கொழு கொம்பு நடாமல், பந்தல் போடாமல், பாதுகாக்காமல், 'நமக்கென்ன வந்தது' என்று இருந்து விட்டால் பூங்காவனம் எப்படி உருப்படும்! அங்கு பட்சிகள் எங்ஙனம் வாழும்!

## அத்தியந்தக் கடமை.

இஸ்லாமியப் பூங்காவனத்துக்கு தண்ணீர் ஊற்றுவது, பந்தல் போடுவது, வேலி கட்டிப் பாதுகாப்பது என்பதெல்லாம் இஷாஅத்துல் இஸ்லாம் சேவையும், தப்லீக் பிரசாரத் தொண்டுமேயாகும். ஒவ்வொரு முஸ்லிமும், தம்மால் இயன்ற மட்டும் பிறருக்கு இஸ்லாத்தின் கடமைகளையும், போதனைகளையும், மார்க்கச் சட்டங்களையும் எடுத்தோத வேண்டும், சதா நல்ல கருமங்களையே புரியும்படி, பாமர மக்களுக்கு உபதேசமும் நஸீஹத்தும் புரிய வேண்டும். தீய காரியங்களில் ஈடுபட்டு ஒழுக்கத்தைக் கெடுத்துக் கொண்டலையும் நம் சகோதரர்களை, நயத்தாலும் பயத்தாலும் நல்வழிக்கு அழைக்க வேண்டும். இது

சர்வ சாதாரணமாய் ஒவ்வொரு முஸ்லிமின் மீதுமுள்ள அத்தியந்தக் கடமையாகும்.

இதன்றி—அறிஞர்கள், ஆலிம்கள், தலைவர்கள், பிரமுகர்கள், முதலாளிகள், செல்வந்தர்கள், செல்வாக்குடையவர்கள் முதலியோர் மீதும் மேற்கூறிய கடமை மிக மிக உண்டு. தன்னுடைய வாய் மொழிச் சொல் ஏற்கப்படும் என்ற அந்தஸ்திலுள்ளோர், யாருக்கும் பயப்படாமல், யாருடைய தயா தாக்ஷண்யத்துக்கும் பணிந்து போகாமல், "அமருபில் மஃரூப்-நஹ்யு அனில் முன்கர்" என்னும் நன்மை கொண்டு ஏவலும், தீங்கை விட்டு விலக்கலுமான இஸ்லாமியத் தொண்டாற்ற வேண்டும்.

முஸ்லிம்களில் எவரும் இந்த இஸ்லாமியக் கடமையை விட்டு மறந்து இருந்து விடக்கூடாது. நன்மை புரிந்து தீமை விலக்கும் புனித காரியத்தில், எல்லா முஸ்லிமும், தத்தம் சக்தியானுசாரம் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

---


## மஜ்மூஉ முஃஜிஸாத்துர் றஸூல்.

இந்த புஸ்தகமாகிறது நமது நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய அற்புதங் களாகிய 1011 முஃஜிஸாக்களை ஒருங்கு திரட்டி "மஜ்மூஉ முஃஜிஸாத்துர் றஸூல்" என்னும் நாமமிட்டு 3 வால்யமாக அச்சிடப் பட்டிருக் கிறது. இதர நபிமார்களுடைய அற்புதங்களை விட நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய முஃஜிஸாத் தென்னும் அற்புத மாகிறது மிகவும் அருமையானது. இதில் 1-வது வால்யம் 395 முஃஜிஸாத்துகள் அடங்கியன.

கிளேஸ் கலிகோ பைண்டு விலை ரூ. 2—14—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# 1955-வது

# வருஷத்தின்

# ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர்

## வெளிவந்து விட்டது.

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இவை சொற்ப காலண்டர்களே அச்சிட்டு வருவதால் சீக்கிரமாக செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்கு தேவையுள்ள காலண்டர்களுக்கு உடனே ஆடர் செய்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை அணா. 10
நூறு காலண்டர் விலை ரூ. 50

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

(4-வது பகுதி)

பண்டை அரபு நாட்டு வள்ளல்

# ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு.

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

## மற்றொரு சம்பவம்.

மாவியா நாயகி கூறிய மேற்படிச் சம்பவம், ஹாத்திம் தம் அருமைக் குதிரையை, எளியோரின் பசிப் பிணியைப் போக்க தியாகம் செய்ததை எடுத்துரைக்கும் அரிய உதாரணமாகும். அந்நாயகி, தம் கணவன், யுத்த களத்தில் எத்தகைய வீரத் தியாகம் புரிந்தார் என்பதை யொட்டியும் மற்றொரு சம்பவத்தை சாக்ஷியமாய் கூறுகிறார். அதாவது:—

"அரபு கபீலாக்கள் சின்னஞ்சிறு விஷயத்துக்கெல்லாம் பெரும் பெருஞ் சண்டையிட்டுக் கொண்டு மடிவார்கள். ஒரு முறை ஒரு கபீலாக் காரர்கள், எங்கள் தாயீ வம்சத்தினர் மீது போர் தொடுத்து விட்டனர். ஹாத்திம் தாயீ தம்முடைய உறவினர் உற்றார், அன்பர், தம் குலத்தார் எல்லோரையும் போர்களத்துக்கு அழைத்தார். ஆனால் ஒரு சிலர்தான் வந்தார்கள். எதிரிகளோ எண்ணற்றபேர், பெரும் படையினராக வந்து விட்டார்கள். ஆனால் ஹாத்திம் தரப்பு படை அத்துணைப் பெரியதல்ல. ஆயினும் தம் இனத்தினர்கட் கெல்லாம் தைரியங் கூறி, தாமே முன்னணியில் முதல்வராக நின்று போரைத் துவக்கிவைத்தார்.

போர் கடுமையாகவே நிகழ்ந்தது. எதிரிப்படை பெரிது; ஹாத்திம் சேனை சிறிது. எனினும் சம பலத்துப் படையினர் போல் இரு சார்பிலும் அமர்க்களம் விளங்கியது. ஹாத்திம் எங்ஙனம் கருணையிலும் தான தர்மத்திலும் சிறந்து விளங்கினாரோ அதே மாதிரி, வீரதீரப் பராக்கிரமத்திலும் சிறந்து விளங்கினார். ஒரு கரத்தில் ஈட்டியும் மறு கரத்தில் வாளும் ஏந்தி, வீரப்போர் புரிந்தார். ஹாத்திம் சூரத்தனத்தைக் கண்டு பின்னணியி லுள்ளோருக்கு உத்ஸாகம் பிறந்து விட்டது. கடும் சமர் மூண்டது. எதிரிகளில் பலர் மாண்டு வீழ்ந்தனர். ஹாத்திம் படையினரில் ஒரு சிலரே வீழ்ந்தனர்.

எதிரிகள் நருங்கத் தொடங்கினர். ஹாத்திம் குடும்பத்தாரின் வீரத்தை அர்ப்ப மென்று எண்ணிக் கொண்டது தவறு என்பதை அப்போதுதான் உணர்ந்து கொண்டனர். ஹாத்திமின் வீரப் பராக்கிரமத்தின் முன் தங்களுடைய சூரத்தனம் ஒன்றும் பயன்படமாட்டாதென்பதை தெரிந்து கொண்டனர். தோல்வி கண்ட எதிரிகள் மனங்குழைந்து ஓடத் தலைப்பட்டனர்.

ஓடத்தொடங்கிய எதிரிகளில் அநேகர் கைது செய்யப்பட்டனர். அங்ஙனம் சிறை பிடிக்கப்பட்டவர்களில், அப்படையின் ஸர்தாரும் இருந்தான். ஹாத்திம் எதிரில், கைதிகள் கொண்டு வந்து வரிசையாக நிறுத்தப்பட்டனர். ஹாத்திம் அப் படைத்தலைவனை மிக மரியாதையாக நடத்தினர். வீணே சண்டை செய்வது அடாத செயல் என்பதை எடுத்தோதினர். எதிரிப் படைத்தலைவன் தன் முட்டாள் தன்மையை உணர்ந்து கொண்டு வருந்தினன். தன் தவறுதலை க்ஷமிக்கும்படியும் ஹாத்திமிடம் மன்றாடி வேண்டிக் கொண்டான்.

கருணையும் தயாளமும் உருவான அந்த சத்துருத் தலைவனை மன்னித்து விட்டார். அவனுடைய பிடிபட்ட மற்ற கைதிகளையும் க்ஷமித்து விட்டார். ஆனால் யுத்தகள தர்மப்படி அவர்களிட மிருந்து அபாயகரமான ஆயுதங்களை யெல்லாம் முறைப்படி ஆக்கிரமித்துக் கொண்டு, போகும்படி உத்தரவிட்டார்.

எல்லோரும் போய் விட்டனர். எதிரிகளின் ஸர்தாராக வந்திருந்த தலைவன் மட்டும் போகாமல், ஹாத்திம் எதிரில் தலைவணங்கி நின்றான். ஹாத்திம் அவனை நோக்கி "உன்னுடைய கோரிக்கை என்ன? உனக்கு யாது வேண்டும்?" என்று வினவினர்.

அதற்கு அத்தலைவர்:— "ஹாத்திம், தாங்கள் மிக தயாள குணத்தினர் என்பதை பிரத்தியக்ஷமாய் உணர்ந்து கொண்டேன். என்னை மன்னித்து விடுதலை யளித்ததைப் போல், தங்களுடைய ஈட்டியையும் வாளையும் எனக்கருள் புரிவீர்களாயின், எனக்குப் பேருபகாரம் புரிந்தவர்க ளாவீர்கள். என்னை நிராயுதபாணியாய் திருப்பி யனுப்பாதீர்கள்" என்று வேண்டிக்கொண்டான்.

ஹாத்திமுக்கு அவன்பால் கருணை சுரந்தது. அவனது வேண்டுகோளுக்கு இரங்கினர். யாதொரு மறு மொழியும் கூறுமல், தன்னுடைய ஈட்டியையும் வாளாயுதத்தையும் சட்டென அவன் கரத்தில் கொடுத்து விட்டு "இப்போது உனக்குத் திருப்தி தானே; போய் வாரும்" என்று ஆசிர்வதித்தார்.

அருகில் நின்று இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த தோழர்கள், ஹாத்திமை நோக்கி, "தலைவரே, என்ன காரியம் செய்தீர்கள்? தங்களுடைய கையாயுதங்களை எதிரியிடம் கொடுத்து விட்டீர்களே, திடீரென்று அவன் தங்கள் மீதே பாய்ந்துத் தாக்கியிருந்தால், உங்கள் உயிருக் கல்லவோ ஆபத்தாய் முடிந்திருக்கும்?" என்றனர்.

அதற்கு ஹாத்திம் "தோழர்களே, நீங்கள் சொல்வது வாஸ்தவம் தான். ஆனல் பெரும் தொகையில் வந்த எதிரிப் படையினரினின்றும் நம்மை காத்து நமக்கு வெற்றியளித்த ஆண்டவன், எனக்கு ஆபத்து நேருங்கால் காப்பாற்றுமலா இருப்பான்? எல்லாம் அவன் செயல்தானே!

மேலும், ஒரு எளியவன் என்னிடம் எதைக் கேட்டாலும் நான் கொடுக்காதிருக்கும் வழக்கமில்லையே; ஆகவே கொடுத்து விட்டேன்" என்று மிக விநயமாய் பதிலளித்தார்.

என்னே பெருந்தன்மை! என்னே தாராள மனம்! தன்னைக் கொல்ல வந்த எதிரியிடமும் கருணைக் காட்டி, தன் ஆயுதங்களை அவனுக்கு அளிக்கும் தன்மையுள்ள கொடை வள்ளலை எங்ஙனம் புகழ்வோம்!

## மனைவியின் சஞ்சலம்

ஹாத்திம் தாயீயின் மனைவி மாவியா, அவரைப்போல் தாராள மனமும் இரக்கத் தன்மையும் உடையவளாயில்லை. ஊரிலுள்ள மற்ற பணக்காரர்களைப்போல் தாங்களும், பணத்தையும் செல்வத்தையும் சேமித்து, யாருக்கும் கொடுக்காமல் சுயமே சுகபோகமாக வாழ வேண்டுமென்பது அவளது ஆசை. ஆகவே அவள், அடிக்கடி தம் கணவருக்கு செல்வத்தின் அருமையைப் பற்றியும், பணம் சேமித்து வைப்பதிலுள்ள இன்பத்தைப் பற்றியும் இதோபதேசம் புரிவாள். ஹாத்திமுடைய தானதருமத்தை ஊதாரித் தனமென எண்ணிக் கொண்டு, கண்ணீர் விட்டும் அழுவாள். சில சமயங்களில் சஞ்சல மிகுதியால் சண்டையிட்டுக் கொள்வாள். இதன் காரணத்தால் ஒரோர் நாட்களில் தம்பதியர் பிணங்கிக் கொண்டு பிரிந்தும் கிடப்பர்.

## மாலிக் செய்த சூழ்ச்சி

ஹாத்திம் மனைவி மாவியாவின் சிறிய தந்தைக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் மாலிக் என்பது. மாலிக்கும் மாவியாவும் பால்யத்தில் விளையாடியவர்கள். மாலிக், தன் குலத்துப் பெண்ணான மாவியாவையே மணந்து கொள்ள வேண்டுமென்று வாலிபத் தருணம் முதல் எண்ணி வந்தான். ஆனால் குணத்திலும் ஒழுக்கத்திலும் நல்லவனாக இல்லாதிருந்தமையால், அந்த அதமனுக்கு தன் மகளை மணமுடித்து வைக்க, மாவியாவின் தந்தை விரும்ப வில்லை. குணத்திலும், ஒழுக்கத்திலும், மனத்திலும் மிக உத்தமனா யிருந்த ஹாத்திமுக்கே தன் புத்திரியை மணமுடித்து விட்டார் அவள் தந்தை.

அதிலிருந்தே அந்த அதமன் மாலிக்குக்கு ஹாத்திம்தாயீ மீது அழுக்காறு உண்டாகி வளர்ந்து வந்தது. எந்த வகையிலேனும் தன் ஆசைக் குகந்த பெண்பாலான மாவியாவை அடைந்து இன்பம் நுகர வேண்டுமென்பது அவனது புழுக்கம் நிறைந்த மனதின் பேரவா.

இங்ஙனமிருக்க, ஒரு சமயம் ஹாத்திமுக்கும் மனைவி மாவியாவுக்கும் பிணக்கு ஏற்பட்டிருந்ததை பயன் படுத்திக் கொள்வான் வேண்டி அவன், அந்தப் பெண்மணியிடம் சென்று துர்போதனை புரியலானான்.

"என் பிரிய மாவியா! பார்த்தாயா; உன் புருஷன் ஹாத்திம் எத்தகைய ஊதாரித்தன முடையவனு யிருக்கின்றான்! அவனை மணந்து நீ ஒரு நாளாவது சுகமாக இருந்தாயா? வீட்டிலிருப்பதையும் சம்பாதிப்பதையும் இப்படி எல்லோருக்கும் வாரி வாரி இறைத்து, வீண் விரயம் செய்து கொண்டிருந்தால் உன் குடும்பம் உருப்படுவது எங்ஙனம்? உனக்கு இரண்டு குழந்தைகளும் சின்னஞ் சிறியன உண்டு. அக்குழந்தைகளின் நன்மையைக் கருதியாவது நீ உன் புருஷனை விட்டுப் பிரிந்து விடக்கூடாதா? ஹாத்திம் தன் சொத்து செல்வங்களை அழித்துப் போடுவது போல் உன்னையும் சீரழியச் செய்வானே; கடைசியில் நீயும் உன் குழந்தையும், வனமும் காடும் திரிந்து பிச்சை யெடுக்க வேண்டித்தான் நேரும். உன் குழந்தைகள் வறுமையால் எலும்பும் தோலுமாகி செத்துத்தான் போகும். எனவே, ஏன் அந்த வறியனுன ஹாத்திமை நம்பிக் கிடக்கின்றாய்? அவனை விட்டுப் பிரிந்து விடு. உன் சிற்றப்பன் மகனும் உன்னை உயிரைப் போல் நேசிப்பவனுமான நான் உன்னை வைத்துக் காப்பாற்ற தயாராய் இருக்கின்றேன்" என்றான்.

இந்தத் துர்போதனைக்கு பேதை மாவியாவின் மனம் இலக்காகி விட்டது. ஊதாரித்தனமும் கையிலுள்ள பணத்தை வைத்துக் காப்பாற்றத் தகுதியுமற்ற புருஷனை விட்டுப் பிரிந்துவிட வேண்டுமென்று அவள் எண்ணங் கொண்டாள்.

அந்தப் பண்டைக்கால அறபுகள், ஆணுயினும் பெண்ணுயினும் மதாசாரக் கட்டுப்பாடின்றி எதேச்சையாக நடந்து கொள்ளும் தன்மையுடையவர்களா யிருந்தார்கள். ஆண் பெண் விவாக பந்தமும் அக்காலை ஒரு சர்வ சாதாரணச் செயலாகவே இருந்து வந்தது. மனைவியின் நடத்தை தனக்குப் பிடிக்காவிடின் புருஷன், அவளை விலக்கிவிட்டு வேறு பெண்ணை ஸ்வீகரித்துக் கொள்வது போலவே, ஒரு ஸ்திரியும் தனக்கு வாய்த்த புருஷனுடைய செயல்முறை பிடித்த மில்லாவிடின், அவனுடன் பிணங்கிக் கொண்டு அவனை விட்டு விலகிச் சென்று தனக்குப் பிடித்த வேறொருவனை வரிந்து கொண்டு விடுவாள்.

இந்த மாதிரிப் போக்கின் பிரகாரமே மாவியா, தன் புருஷனுன ஹாத்திமை விட்டுப் பிரிந்துப் போகத் துணிந்து விட்டாள்.

புருஷன் தன் மனைவியை விட்டுப் பிரிய விரும்பினல், பகிரங்கமாய் அக்கருத்தை வெளியிட்டு 'தலாக்' செய்து அனுப்பி விடுவான். மனைவி தன் புருஷனை விலக்கிவிட விரும்பினல் அதற்கு ஒரு முறையுண்டு; மனைவி தன் கூடாரத்து வாயிலை வேறு திசையில் மாற்றி வைத்து விடுவாள். அதாவது புருஷன் இல்லத்தை விட்டுப் போகையில் வாயில் (கதவு) கிழக்குப் பக்க மிருந்தால், அவன் திரும்பி வரும் சமயம் அதை யவள் மேற்குப் பக்கமாய் திருப்பி வைத்துவிட

வேண்டும்; புருஷன் அதைப் பார்த்துத் திரும்பிப் போய்விட வேண்டும்.

மேலும், முதல் நாள் இரவு ஹாத்திமுக்கும் மனைவி மாவியாவுக்கும் பிணக்கு ஏற்பட்டிருந்தது. வழக்கம் போல் ஹாத்திம் மறுநாள் மாலை வீட்டுக்குப் போய்ப் பார்க்கையில், கூடாரத்து வாயில் மாற்றி வைக்கப்பட்டிருந்ததை கண்டு வியப்படைந்தார். தன் மனைவி தன்னை விவாக பந்தத்தி லிருந்து பிரித்து விட்டதை யுணர்ந்தார். அவள் அவருக்கு அன்னிய ஸ்திரியாகி விட்டாள். அவளுடைய கூடாரத்துக்குள் நுழைய ஹாத்திமுக்கு உரிமையில்லை. ஹாத்திம் தன் மூத்த குழந்தையான அதீயை மட்டும் அழைத்துக் கொண்டு போய் விட்டார். ஊரை விட்டுப் போய் விடவில்லை. அருகிலேயே மற்றோர் ஓடை யண்மையில் தனி கூடாரம் அமைத்து அதில் தனிமையாய் இருந்து வந்தார். இது இங்ஙன மிருக்கட்டும். (தொடரும்)


## மிப்தாஹுஸ்ஸலாஹு புஹானி பீ தர்ஜுமத்தி மஜ்மூஉஸ்ஸலாஹுல்தானி

இந்த கிதாபாகிறது ஹனபீ மதுஹபுக்கும் ஷாபிஈ மதுஹபுக்கும் அவசியமாகிய நூதனமான ஹுக்முகளைப் பொதிந்த பிக்ஹு மஸ்அலாக்களாகும். அதினின்றும் ஒவ்வொரு ஹுக்மையும் சகல ஜனங்களும் இலகுவா யறியும் பொருட்டு ஸுவாலும் ஜவாபுமாக சேகரிக்கப்பட்டிருக்கின்றது. இது ஸுல்தான் மஹ்மூது கஸ்னவீ றஹிமஹுல்லாஹு அவர்களால் தங்களுடைய காலத்தில் உள்ள அநேக உலமாக்களின் உதவியால் சேகரிக்கப்பட்டு பார்ஸீ பாஷையிலும் உருது பாஷையிலும் அருமையாய் விளங்கி வந்ததை நம்மவருக்கு உபயோகமாகும்படி தமிழிலும் அறபுத் தமிழிலும் அச்சிடப்பட்டிருக்கிறது.

கிரையம் சுத்தத் தமிழ் கிளேஸ் காகிதம்
கலிகோ பைண்டு ரூ. 2-6-0

ஷை அரபுத் தமிழ் வெள்ளை காகிதம்
கலிகோ பைண்டு ரூ. 5-0-0

கிடைக்குமிடம் :—
ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

(5–வது பகுதி)

# திருக் குர்ஆன் :: :: சாரசங்கிரஹம்.

## பல விஷயங்களைப் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி.)

### ஈமானுடையோர் இறைவனை விரும்புவர்

ஈமான் உடையோர் எப்படிப்பட்டவர்களெனின்: "அல்லாஹ்வின் திருநாமம் சொல்லப்படுங்கால், அவர்களுடைய உள்ளம் அஞ்சி ஒடுங்கும்; இன்னம் அவர்கள் முன், இறைவனின் திருவாக்கியம் (ஆயத்து) ஓதப்படுமானல், அதனல் அவர்களுடைய ஈமான் (விசுவாசம்) மறுமலர்ச்சியடையும். அவர்கள் தமது எந்த விவகாரத்திற்கும் தங்கள் இரக்ஷகன் மீதே நம்பிக்கை வைத்திருப்பார்கள். இவைகளல்லாமல், (ஐங்காலம்) தொழுகையை நிறைவேற்றுவார்கள்; இன்னம் நாம் அவர்கட்கு அளித்தவற்றி லிருந்து (பொருளை) ஆண்டவன் பாதையில் செலவிடுவார்கள். இவர்களே உண்மையான முஸ்லிம்கள். இன்னோருக்காக, இவர்களுடைய இறைவனிடம் பெரும் நற்பதவிகள் உண்டு. இவர்களுக்கு (பாப) மன்னிப்பும் கிடைக்கும். கௌரவமான ஜீவனோபாயம் இவர்களுக்கு அருளப்படும். (ஸூரா: அல் அன்பால்; ருகூ: 1.)

### நம்பிக்கைப் பொருளில் மோசம் செய்யாதீர்

முஸ்லிம்களே, அல்லாஹ்வுக்கும் அவனது ரஸூலுக்கும் (வழிபடுவதில்) மாறுபாடு செய்யாதீர்கள். இன்னும் உங்களுக்குள் அமானத் (நம்பிக்கைப்) பொருளில் மோசம் செய்யாதீர்கள். இன்னம் அமானத்தில் கியானத்துச செய்வது எத்துணை தீமை பயப்பதென்று உங்களுக்குத் தெரியுமா? (உங்களை மதிமயக்கும்) உங்கள் செல்வமும் மக்களும் ஒரு (வகை) பித்ன (மாய்கை)யே யாகும். இறைவனிடம், நற்காரியங்கள் புரிவோர்க்கு மகத்தான (நற்) கூலி உண்டு. (ஸூ: அல் அன்பால்; ரு: 3.)

### விசுவாசிகட்கு இறைவனின் சுவர்க்கம் உண்டு

இறைவனனவன், ஈமானுடைய ஆண் பாலர் (பக்தர்)கட்கும், ஈமானுடைய பெண் பாலர் (பக்தை)கட்கும், சுவர்க்கத்து உத்தியானவனம் பற்றி வாக்களித்து இருக்கிறன். அதன் கீழ் (அருள்) நதிகள் ஓடிக்கொண்டிருக்கும். அன்னோர் அந்த புவனத்தில் சதாகாலம் (சந்தோஷமாய்) இருப்பார்கள். அல்லாஹு தஆலா, அவர்கட்கு சுவர்க்கத்தில் நேர்த்தியான இல்லங்கள் அளிப்பது பற்றியும் வாக்களித்

திருக்கிறான். இறைவனின், திருப்தி மகாப் பெரிய விஷயமாகும். இதுவே (முஸ்லிம்களாகிய) பக்தர்களுக்கு மகாப் பெரும் வெற்றியாகும். (ஸூ: அத்தவ்பா; ரு: 9.)

## மாந்தன், துன்பம் நீங்கியதும் மனம் மாறி விடுகிறான்

மாந்தனுக்கு, ஏதேனும் துன்பம் வந்துறுத்தும் போது அவன் படுத்தும், அமர்ந்தும், நின்றும் எந்த நிலையிலும் (இயலாமையோடு) எம்மை (கூவிக் கூவி) அழைத்துப் புலம்புகிறான். பிறகு நாம், அவ்னுடைய (அந்தத்) துன்பத்தை நீக்கி விடுங்கால் அவன் எம்மை விட்டு (முகம் திரும்பிக்கொண்டு) போகத்தலைப்படுகிறான். எவ்வாறெனின், அவனுக்கு துன்பம் வந்து எம்மைக் கோரி அழாதவன்போல் (மனம் மாறியவனாக) ஆய்விடுகிறான். வாஸ்தவம், எந்த மாந்தர் சத்திய எல்லையைக்கடந்து வெளிப்பட்டு விடுகிறார்களோ அவர்களுக்கு, அவர்களின் தீய கருமங்களே (அச்சமயம்) மகா நேர்மையானவையாய்ப் படுகின்றன. ஜனங்களே! (யோசித்துப்பாருங்கள்; இங்ஙனம் மனமாற்றம் அடைந்துப்போன) எத்தனையோ சமூகத்தினர்களை (முன்னர்) நாம் அழித்துப் போட்டிருக்கிறோம். அன்னோர் தாமே தங்கள் மீது இந்த துன்பம் நேரிட ஆயத்தம் செய்து கொண்டார்கள். அந்த சமூகத்தவர்களிடம் (எச்சரிக்கை செய்யும்) தூதர் (ரஸூல்) அற்புதங்களை கொண்டு வந்து சமர்ப்பித்தார்; ஆயினும் அவர்கள் விசுவாசம் (ஈமான்) கொள்ளவேயில்லை. (ஸூ: யூனுஸ்; ரு: 2.)

## மனிதன் நன்றிமறந்தவனாகி விட்டான்

நாம் மனிதனுக்கு எமது புறத்திலிருந்து அருள் பாக்ய இன்பம் நுகரச் செய்கின்றோம்; பிறகு அவனிடமிருந்து அந்த அருள் பாக்யத்தை (சோதனைக்காக) பறித்துக் கொள்ளும்போது, அவன் எம்மைப் பற்றி (குறை சொல்லத் தொடங்கி விடுவதோடு) அற்ப விஷயத்துக்காக (முரண்பட்டு) எம்மிடம் நம்பிக்கை இழந்தவனாகி விடுகிறான். அங்ஙனமிருந்தும் யாம் அவனுடைய (சகல) கஷ்டங்களையும் போக்குகிறோம். அதன் பின்பும் யாம் அவனுக்கு சுக சௌக்கியத்தின் இன்பம் அளிக்கும் போது (மட்டும்) "ஆ, என் கஷ்டங்களெல்லாம் தீர்ந்து விட்டன" என்று புளகாங்கித மடைகிறான். இவ்வாறு மாந்தன் (இயற்கையிலேயே) அதிதுரிதத்தில் சந்தோஷங் கொண்டாடுபவனாகவும், (அதிதுரிதத்தில்) தற்பெருமை கொள்ளக் கூடிய வனாகவும் இருக்கின்றான். ஆயினும் எவர், (ஸப்ரு என்னும்) பொறுமை யுடையவர்களா யிருக்கிறார்களோ, எவர் நற்கருமம் புரிபவர்களா யிருக்கிறார்களோ (அவர்கள் இப்படிப்பட்டவர்களல்லர்); அவர்கட்கு, பாப மன்னிப்பும் மகத்தான நற்கூலியும் உண்டு. (ஸூ, ஹூத்; ரு: 2)

## மறுஜன்ம வாதிகள் நரகமே போய்ச் சேருவர்

ஏ நபியே, நீவிர் ஆச்சரியப்படுவீராயினும் பொருத்தமே யாகும்: ஏனெனின் சிலபேர்களுடைய ஆச்சரியக் கூற்று யாதாயிருக்கிறதெனின். "நாங்கள் (மரித்து) மண்ணுப் போய் (புற் பூண்டாகவோ, வேறு ரூபமாகவோ, புழு பூச்சியாகவோ) மறுபிறவி எடுத்து மீண்டும் உலகத்துக்கே வந்து விடுவோமே" என்பதாகும். இன்னோர் தங்கள் இரக்ஷகனுக்கு (கட்டளைகளை மீறி) மாறுபாடு செய்பவர்களாவர். அன்னோர் கழுத்துக்களில் (துன்ப) வளையம் போடப்படும். அவர்களே, சதா சர்வ காலம் நரகலோகத்தில் விழுந்து கிடப்பவர்களாவர். (ஸூரா ரஅத்; ரு: 1)

## மனிதன் குழைந்த மண்ணால் படைக்கப்பட்டவன்

(இறைவனுகிய) யாம் மனிதனை, குழைந்தழுகிப் பின் காய்ந்த கரிய காரை மண்ணுல் சிருஷ்டித்தோம். அதற்கு முன்னதாக, யாம் 'ஜின்' இனத்தை நெருப்புச் சுடரால் சிருஷ்டித்திருக்கிறோம். உங்கள் இறைவன் (ஆதியில்) தன் தேவதூதர்களை நோக்கி "நான், மாந்தனை குழைந்த கரிய நிற காரை மண்ணுல் படைக்கப்போகிறேன். பிறகு, (அவ்வாறை படைத்துப்) பூர்த்தியடையச் செய்வேன்; அதன் பின் அதில் எமது ஆவியை (ஜீவனை) ஊதுவேன்; அப்போது (மலக்குகளாகிய) நீங்கள் எல்லோரும் (அந்த மனித உருவத்தின் முன்னுல்) அதற்கு (சிரம்பணிந்து) ஸஜ்தா செய்ய வேண்டும்" என்று கட்டளையிட்டான். (அங்ஙனமே சிருஷ்டித்து முடிந்தபோது) மலக்குகள் அனைவரும், அந்த உருவுக்கு (ஆதமுக்கு) சிரம்பணிவு செய்தார்கள்.... ஆனுல்.... (ஸூ. ஹஜ்ர்: ரு: 3.)

## மாந்தனுக்கு சிரம்பணிய மறுத்தான் ஷைத்தான்

.........(இப்லீஸ் எனும்) ஷைத்தான் மட்டும், அங்ஙனம் சிரவணக்கம் செய்(யும் கூட்டத்தாருடன் சேர்ந்துகொள்) வதை விட்டும் விலகிக் கொண்டான். அப்போது (அவனை நோக்கி) ஆண்டவன் கூறினுன்: "ஏ ஷைத்தானே! உனக்கென்ன கேடு நேரிட்டது; (யாம் கட்டளை யிட்டிருந்தும்) நீ, சிரம்பணிந்தவர்களுடைய குழாத்தில் சேர்ந்து கொள்ள வில்லையே" என்று. அதற்கு அந்த ஷைத்தான் சொல்லலானுன்:— "நீயோ, குழைந்த கரிய களிமண் காரையால் சிருஷ்டித்தாயே; அப்படிப்பட்ட (அற்பமாகிய) மனிதனுக்கு சிரவணக்கம் புரியக்கூடியவன் நானல்ல" என்று. அப்போது, "அப்படியானுல் நீ (சுவர்க்கமாகிய) இவ்விடத்தை விட்டு வெளியே போய் விடு; நீ சபிக்கப்பட்டவனுய் விட்டாய்; இறுதி யூழிகாலம் வரை உன் மீது முனிவு உண்டாகிக் கொண்டிருக்கக் கடவது" என்று இறைவன் கட்

டளை யிட்டு விட்டான். மேலும் அந்த ஷைத்தான் (இறைவனை நோக்கி) "ஏ இறைவனே! (மாந்தர் மரித்து எழுந்துயிர் பெறுவார்களே) அந்த இறுதி (கியாமத்) காலம்வரை எனக்கு, (மாந்தனை எதிர்த்துப் போராட) சந்தர்ப்பம் கொடு" என்று கேட்டுக் கொண்டான். அதன் படியே இறைவன் "உனக்கு இறுதி கியாமத் நாள் வரை (நீ கோரிய படி சூழ்ச்சி செய்ய) சந்தர்ப்பம் அளித்துள்ளேன்" என்று விடை யிறுத்தான். மேலும் ஷைத்தான் கூறலானன்: ஏ இறைவா! நீ என்னை சபித்து (இங்கிருந்து) விரட்டி விட்டாய். எனவே, நானும் (விரோதித்து) மனிதனுக்கு உலகில், (லோக ஆசாபாச மாயவலை விரித்து) அவனை வழி கெடுத்துப் போட பிரயத்தனம் புரிவேன். ஆனல் உனது அத்தியந்த நல்லடியார்களாக இருப்பரோ அவர்களைத் தவிர்த்து; (ஏனெனின் தூய பக்தர் என் மோச மாயவலையில் சிக்கவே மாட்டார்கள்) என்று. அப்போது (இப்லீஸை நோக்கி) இறைவன் திருவுளமானதாவது: "ஆம், (எவரும்) என் திருப்திப் பெற்ற நல்லவர்களா வதற்கு இது ஒன்றே (தக்க) வழியாகும். (ஞாபக மிருக்கட்டும்). எவர், என்னுடைய தூய நல்லடியாராய் இருப்பரோ, அவர்கள் பால் உன்னுடைய சூழ்ச்சித்திறன் செல்லவே செல்லாது. ஆனல், வழிகெட்டவர்களா யிருப்பரே அவர்கள் மட்டும் உன்னைப் பின்பற்றி உழல்வர். இப்படிப்பட்ட (தீய)வர்களுக்காக யாம் அந்த (ஒரு வகைக் கொடிய) நரகத்தைப் பற்றி வார்த்தைப்பாடு செய்திருக்கிறோம். அந்த நரகத்திற்கு எழு வாயல்கள் இருக்கும்; ஒவ்வொரு வாயல் வழியாகவும் தனித்தனியே நரக வாசிகள், கூட்டங் கூட்டமாய் (நரகில்) பிரவேசம் செய்வார்கள். (ஸூ. ஹஜ்ர்: ரு: 4)

## மனிதனின் விதி அவன் பிடரியில் கிடக்கிறது

நாம் ஒவ்வொரு மனிதனுடையவும் நற் செயல் தீச் செயல் ஆகிய (விதிவசம் முதலிய)வைகளை அவன் பொறுப்பிலாக்கி அவன் கழுத்திலேயே தொங்கப் போட்டு விட்டோம். இறுதி (கியாமத்) நாளில், யாம் அவனுடைய அனுஷ்டான சாஸனத்தை (அதைக் கொண்டே) அவன் முன் சமர்ப்பிப்போம். அதை அவன், தன் முன் பிரத்தியக்ஷமாய் காணுவான். (இங்ஙனம் அவனது செயல்களின் பட்டோலையை அவனுக்குக் காட்டி) "உன் அனுஷ்டான நாமாவை (ரிக்கார்டை) நீயே படித்துப் பார்த்துக் கொள்; உன்னுடைய (நற் செயல் தீச் செயலின்) கணக்கை நீயே முடித்துக் கொள்" என்று சொல்லி விடுவோம். (ஸூ: பனீ இஸ்ராயீல், ரு: 2)

## வறுமைக்காக பயந்து பாபம் செய்யாதீர்

ஜனங்களே, வறுமைக்காக பயந்து, உங்களுடைய மக்களை கொன்று போடாதீர்கள்; அவைகட்கும் உங்களுக்கும் ஜீவனோபாயம்

(உணவு) தருபவன் (இறைவனாகிய) யாமேயாம். குழந்தைகளை கொல்வது (கர்ப்பம் சிதைத்து மரிய விடுவது) மகாப் பாபமான செயலாகும். (ஸூ. பனீ இஸ்ராயீல்; ரு: 4)

## பூமி மீது தலையுயர்த்தி நடக்காதீர்

(ஏ மானிடப் பிறவியே) நீ, பூமி மீது நடக்கும் போது (உதைத்து அகங்காரத்தால்) தலையுயர்த்தி நடக்காதே. இப்படி நடப்பதால், நீ என்ன பூமியைப் பிளந்து விடப் போகிறாயா? அல்லது (நிமிர்ந்த நடையால்) மலைகளின் உச்சத்தை எட்டி விடப்போகிறாயா? ஒருபோதுமில்லை. (ஏ நபியே,) இப்படிப் பட்ட மமதைகளும் தீமைகளும் உமது இறைவனுக்குத் திருப்தி யில்லாதவை யாகும். (ஸூ. பனீ இஸ்ராயீல்; ரு: 4)

## மனிதன் குறுகிய மனத்தினன் ஆவன்

(ஏ நபியே, ஈன மனிதர்களுக்குச்) சொல்லிவிடுவீராக: என்னுடைய இரக்ஷகனுடைய அருட்பாக்கியப் பொக்கிஷ மெல்லா வற்றையும் உங்கள் ஆதிக்கத்தில் ஒப்படைத்த போதிலும், நீங்கள் (ஐயோ) பாக்கிய மெல்லாம் செலவழிந்துப் போகுமே என்று (அஞ்சி) அதன் வாயிலை அடைத்துப் போடுவீர்கள். ஆம், மனிதன் மிக்க குறுகிய மனத்தினனாகவே இருக்கிறான். (ஸூ. பனீ இஸ்ராயீல்; ரு: 11)

(தொடரும்.)


## உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும், எழுதவும், படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி, இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்தூவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப் பட்டுள்ளது.

விலை ரூ. 2—8—0

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹை ரோடு, திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# இரத்தச் சின்னம்

## (தொடர் கதை 9—வது பகுதி)

### 17-வது அத்தியாயம்.

மறுநாள் அதிகாலை ஸிம்ஸன் தனது அறையில் உட்கார்ந்திருக்கும் சமயம் கதவு தட்டும்சப்தம் கேட்டு திறந்தார். இன்ஸ்பெக்டர்பென்டன் உள்வந்து, இரவு ஹட்டன் வீட்டில் நடந்த விஷயத்தை விபரித்தார். "ஏன் எனக்கு உடனே தெரிவிக்கவில்லை?" என்று ஸிம்ஸன் கேட்டார். பிறகு சிறித்துக் கொண்டே, "என்னிடம் ஏன் நீங்கள் தெரிவிக்க வேண்டும். அது உங்களின் விஷயம். நான் அதில் நானும் சேர்ந்தவனைப் போல் கேட்டு விட்டேன். மன்னிக்கவும். எதற்கும் கொலை செய்தவன் எப்படி தப்பித்துக் கொண்டான். 2 மணி நேரமாக உனது ஆட்கள் அவ்வீட்டை சுற்றி யிருந்ததாக சொல்லுகிறீர்கள். அந்த பெண் வெளியில் வந்தாளா ?" என்று கேட்டார்.

"அவள் வெளிவந்ததும், காரில் ஏறி தனது வீட்டுக்கு போய் விட்டாள்" என்று பென்டன் பதிலளித்தார்.

"வேறு யாரும் வீட்டினுள் போகவில்லையா ?"

"அது தான் தெரியவில்லை. ஹட்டன் தியேட்டருக்குப் போயிருக்கும் போது, யாராவது வீட்டினுள் நுழைந்திருக்கக் கூடும். அதுவுமல்லாமல் நாங்கள் அவ்வீட்டை சுற்றி யிருந்தது உண்மை தான். ஆனாலும் அவ்வீட்டிற்குப் பின்னால் கார் விடும் ஷெட்டுக்கு பின்புரம் ஒரு வழி யிருக்கிறது. அதை நாங்கள் கவனிக்கவில்லை. அவ்வழியாக கொலையாளி போய் யிருக்கலாம்"

"அப்பெண்ணின் பேரில் சந்தேகமில்லையோ ?"

இல்லை யென்று பென்டன் தலையை யசைத்தார்.

"நீங்கள் எதற்காக ஹட்டன் வீட்டை சூழ்ந்திருந்தீர்கள் ?" என்று ஸிம்ஸன் கேட்டார்.

"ஹட்டன் லன்டனுக்கு வந்ததி லிருந்தே அவரை கவனித்து வருகிறோம். அதுவுமல்லாமல் பெர்ரி இறப்பதற்கு முன் அவருக்கு வந்த கடிதத்தின் ஒரு துண்டு என் வசம் கிடைத்தது. அதிலிருந்த கையெழுத்தும், ஹட்டன் தனது தையற்காரனின் அட்ரஸை எனக்கு எழுதிக் கொடுத்த கையெழுத்தும் ஒத்திருந்தது. இக்காரணத்தைக்

கொண்டும் அவரை கவனித்து வந்தோம்'' என்று பென்டன் பதிலளித்தார்.

"இந்த ஹட்டனுக்கும் பெர்ரிக்கும் என்ன சம்பந்த மென்று விளங்கவில்லை. ஹட்டன் பெர்ரி வீட்டிற்கு வந்ததும், ஏதோ பயம் பிடிக்கப்பட்டு நடுங்கியதாகவும் தெரிய வந்தது'' என்றும் சொன்னார்.

"ஆம். அவ்விஷயம் எனக்கும் தெரியும். பெர்ரி என்னிடம் சொன்னார்'' என்று ஸிம்ஸன் சொன்னார்.

"ஹட்டன் அவ்வீட்டில் தங்க மாட்டே னென்றும் நேராக லண்டனுக்கு போவதாக சொல்லி, டிரெயினில் மறு ஸ்டேஷன் வரை போனார். அங்கிருந்து தனது பெட்டியை லண்டனுக்கு அனுப்பி விட்டு, தான் நடந்து திரும்பி வந்தார். முதல் வரும் போது பயந்தவர் மறுமுறை ஏன் திரும்பி வந்தார்? முதல் நாள் பெர்ரியைச் சந்தித் திருக்க, ஏதும் விஷயம் சொல்ல வேண்டிய திருந்தால் நேரில் சொல்லி யிருக்கலாம். பின்னால் கடிதம் எழுதி அனுப்ப காரணம் என்ன?''

இக்கேள்விகளுக்கு ஸிம்ஸன் யாதும் பதில் சொல்லவில்லை.
"ஹட்டன் எவ்வாறு கொல்லப்பட்டார்?'' என்று ஸிம்ஸன் கேட்டார்.

"அதுவும் மர்மமாக யிருக்கிறது. கொலையாளி ஹட்டன் அறை யினுள் நுழைந்திருக்க முடியாது. ஸ்மித்தை விசாரித்தேன். அவனுக்கு இக்கொலையைப் பற்றியே தெரியாதாம். திருடுவதற்காக வீட்டினுள் நுழைந்தானும். வேறு யாரோ வீட்டில் நடமாடுவதாக தெரிந்து, தான் ஒழிந்து கொண்டானும். ஏதோ புஸ் என்று காற்று அடிப்பது போல் ஒரு சப்தமும் கேட்டதாம். ஹட்டன் இறந்து கிடப்பதற்கருகே யுள்ள ஒரு தலைகணையின் பேரில் ஒரு வட்டமான கரை தெரிந்தது. அதைப் பார்த்ததும் இரத்த சின்ன குறி என்று நினைத்தேன். ஆனால் அதைப் போல் இன்னொரு இடத்திலும் இருந்தது. எவ்வாறு இறந்தாரென்று டாக்டரால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆனால் கொலை செய்ததற்கு காரணம் நன்ருக தெரிகிறது. கொஞ்ச முன், நான் மாரீஸிடம் டெலிபோன் மூலம் பேசினேன். அவர் வாக்குபடி நேற்று ஹட்டன் பாங்கி லிருந்து பெரிய தொகை வாங்கிக் கொண்டு, தனது பாங்க் கணக்கை தீர்த்துக் கொண்டு சென்ருராம். இந்த மாரீஸுக்கும் ஹட்டனுக்கும் ஏதோ மனஸ்தாபமாம். இரும்பு பெட்டியை திறந்தவன் ஸ்மித். ஆனால் அவன் வசம் அந்த தொகையில்லை. அவன் திருடிய சில்லரை சாமான்கள் அகப்பட்டன. ஆதலால் இந்த பெரிய தொகையைத் திருடியது யார்?'' என்று பென்டன் தனது மனதிலுள்ள சந்தேகங்களைத் தெரியப்படுத்தியவாறு கேட்டார்.

ஸிம்ஸன் தனது கையை பின்னால் கட்டியவாறு தலையை கிழே கவிழ்த்துக் கொண்டு அங்கும் இங்கும் நடந்து கொண்டே யோசனை

செய்தார். பிறகு "மாரீஸைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்" என்று கேட்டார்.

பென்டன் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

பிறகு "பாங்கை நடத்திக் கொண்டிருக்கிறார். அவ்வளவு தான் எனக்குத் தெரியும்."

"அவர் அதிக சொந்த பணமுடையவரா?"

"அதைப் பற்றி எனக்கு சந்தேகம்"

"அவர்களிருவரும் சிநேகிதர்களா? மாரீஸூம்-ஹட்டனும்."

"இருவருக்கும் நட்பு யிருந்ததாகக் கேள்வி. அதுவுமல்லாமல் மாரீஸ் ஏதோ காரணத்தினால் ஹட்டனுக்கு பயந்து கொண்டிருந்த தாகவும் அதனால் ஹட்டன் சொல்படி மாரீஸ் நடந்து வந்ததாக தெரிய வந்தேன்" என்று இன்ஸ்பெக்டர் சொன்னார்.

இது வரை இஸ்பெக்டரை ஒரு சாதாரண போலீஸ் ஆபிஸராக எண்ணி வந்த ஸிம்ஸன், தற்போது இவ்வளவு விஷயங்களை சொல்லியதும், "இவர் மிக திறமைசாலி, எதையும் கூர்ந்து ஆலோசிப்பவர்" என்னும் தீர்மானத்திற்கு வந்தார்.

"இன்று ஹட்டன் வீட்டிற்கு நான் போய் பார்க்க முடியுமா?" என்று ஸிம்ஸன் கேட்டார்.

"உங்களை அழைத்துப் போவதற்காகவே நானும் வந்தேன். வெளியிலும் ஒரு காரை நிற்பாட்டி வைத்திருக்கிறேன்" என்று இன்ஸ்பெக்டர் பதிலளித்தார்.

ஸிம்ஸன் ஹட்டன் வீட்டிற்கு போகும்போது வழியில் ஒன்றும் பேசாமல் ஏதோ யோசித்துக்கொண்டே சென்றார். ஹட்டன் வீட்டினுள் ஹாலில் பிரவேசித்தபின் "ஒரு இரும்பு குழல் இங்கு எங்காவது கிடைக்கலாம். தேடிப்பார்க்க வேண்டும்" என்று ஸிம்ஸன் சொன்னார்.

இதைக்கேட்ட, அங்கு நின்று கொண்டிருந்த ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள் முன்வந்து, "ஒரு இரும்பு புட்டி, கார் ஷெட்டிலிருந்தது" என்று தெரிவித்தான்.

"ஆ! அவ்வாறு தான் நானும் நினைத்தேன்" என்று ஸிம்ஸன் சந்தோஷத்துடன் சொல்லியவாறு மெத்தைக்கு ஓடினார். ஹட்டனிருந்த அறையினுள் சென்று அங்கு கீழ் விரிக்கப்பட்ட ஜம்காளத்தை கீழே குனிந்து முகர்ந்து பார்த்தார். இருமிக்கொண்டே எழுந்து வெளிவந்தார். "அந்த இரும்பு புட்டியை கொண்டு வாருங்கள். பார்க்கலாம்" என்றார். உடனே அவரிடம் அதை கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. அது ஒரு இரும்பு புட்டி; ஒரு வாயில் ஒரு

குழலைப்போன்று நீண்டிருந்தது. அந்த குழலின் வாயை மூடவும் திறக்கவும் ஒரு சிறிய கைப்பிடியிருந்தது.

"இன்னும் எங்காவது ஒரு டம்ளர் தனியாக யிருக்க வேண்டும் அல்லது ஒரு சிறிய புட்டியாவது இருக்கும். தேடிப்பாருங்கள்" என்று ஸிம்ஸன் சொல்லவே, "இந்த இரும்பு புட்டிக்கு பக்கத்தில் ஒரு சிறிய கண்ணாடி புட்டி ஒன்று மிருந்தது. ஆனால் அது உடைந்திருந்தது" என்று கான்ஸ்டேபிள் சொன்னான்.

"ஆ! அதையும் உடனே கொண்டுவா. உடைந்திருந்தாலும், அதில் என்னயிருந்த தென்பதாவது அறியலாம்" என்று சொன்னார். இவைகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த பென்டனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "எனக்கு ஒன்றும் புரியவில்லை. உங்களின் எண்ணம் என்ன?" என்று கேட்டார்.

"மிஸ்டர் பென்டன்! கொலை செய்ய ஒரு புது மாதிரி வழி, வாரும் அறையினுள்" என்று ஸிம்ஸன் சொல்லிக் கொண்டே அறையினுள் சென்றார்.

படுக்கையின் பேரில் ஹட்டனின் சவம் துணியால் மூடப்பட்டு கிடந்தது. ஜன்னல் கதவுகள் எல்லாம் திறக்கப்பட்டிருந்தன. காற்று ஜன்னல் வழியாக வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. "வாசனை ஒன்றும் தெரியவில்லை" என்று தனக்குத்தானே சொன்னார். கீழே குனிந்து தரையில் விரிக்கப்பட்டிருந்த ஜம்காளத்தை மறு முறை முகர்ந்தார். உடனே இரும்பிக்கொண்டே எழுந்தார். இதற்கிடையில் உடைந்த கண்ணாடி புட்டியின் கீழ் பாகம் கொண்டு வந்துக் கொடுக்கப்பட்டது. அதில் ஒன்று இரண்டு துளி திரவம் இருந்தது. ஸிம்ஸன் அதை தனது கையில் ஊற்றினார்.

"சோப்பும் தண்ணீரும் நான் நினைத்தபடிதான். ஹட்டன் எவ்வாறு கொல்லப்பட்டார் என்று தற்போது என்னால் சொல்ல முடியும். ஸ்மித் ஏதோ புஸ் என்று காற்றடிப்பதுபோல் சப்தம் கேட்டான் அல்லவா அது இந்த இரும்பு புட்டியிலிருந்து விஷக்காற்று வெளி வரும்பொழுது ஏற்பட்ட சப்தம். நான் சொல்வது தப்பாகவும் இருக்கலாம். என் எண்ணப்படி இந்த இரும்பு புட்டியிலும் கொஞ்ச விஷக்காற்று இருக்கலாம் அது கனமான விஷக்காற்று. இந்த அறையிலும் தரையின் அருகே கொஞ்சம் இருக்கிறது. இந்த விஷக்காற்று கனமாக இருப்பதால் மேல் எழும்பாது கீழேயேதான் இருக்கும்" என்று சொன்னார்.

"இந்த விஷகாற்று இவ்வறையினுள் எப்படி செலுத்தினார்கள்?"

"அது மிக சுலபமாக செலுத்தப்பட்டிருக்கிறது. இரத்தச் சின்ன சங்கத்தின் யோசனைக்குச் சொல்ல வேண்டுமா! நீர் குமிழியின்

மூலமாக செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த புட்டியிலுள்ள குழாயின் வாயை சோப் தண்ணீரில் அமிழ்த்தி எடுத்து, வாயை திறந்ததும் புட்டியிலிருந்து விஷக்காற்று வெளியே வந்ததும் நீர் குமிழிகளாக உருண்டையாக வெளிவரும். இந்த நீர் குமிழி எதிலாவது பட்டதும் உடைந்து அதனுள் இருந்து விஷக்காற்று வெளியாகும். ஒரு குமிழி ஹட்டன் படுத்திருக்கும் தலையணையின் பேரில் பட்டு உடைந்திருக்கவே இந்த வட்டகரை தோன்றுகிறது. ஒன்று அதோ சுவற்றின் மேல்பட்டு கரை தெரிகிறது. ஹட்டன் முகத்தில் ஒன்றோ அல்லது அநேக குமிழிகளோ பட்டிருக்கலாம்'' என்று விபரித்தார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் பென்டன் ஆச்சரியத்துடன் திகைத்து நின்றார்.

"நான் இங்கு வரும் பொழுது தான் இந்த யோசனை எனக்கு தென்பட்டது. தலை அணையில் ஒரு வட்டமான கறை இருந்ததாக சொல்லவே நான் சிறு வயதில் சோப் தண்ணீரில் கறைத்து ஒரு குழலால் முட்டைகள் ஊதிக் கொண்டிருந்தது ஞாபகம் வந்தது" என்று சொன்னார்.

"நாங்கள் வரும் பொழுது ஒன்றும் வாசனையே இல்லையே" என்று பென்டன் கேட்டார்.

"ஜன்னல் வழியாக காற்று அடிக்கிறது அல்லவா? அதனால் வாசனை இருந்திராது. அதுவுமல்லாமல் இது கனமான விஷக்காற்றாயிருப்பதனால் கீழே தரையிலே தங்கிவிடும்'' என்று ஸிம்ஸன் சொல்லிக் கொண்டே ஒரு நெருப்புப் பெட்டியிலிருந்து ஒரு குச்சியை எடுத்து கொளுத்தினார். எறிந்தது. அந்த எறியும் குச்சியை கீழே தரையின் அருகே கொண்டு சென்றதும் சுமார் தரையிலிருந்து ஓர் அங்குல உயரத்திற்கு குச்சி வந்ததும் அணைந்து விட்டது. இதை எல்லாம் பார்த்த பென்டனும் அங்கிருந்த மற்ற போலீஸ் அதிகாரிகளும் ஒன்றும் பேசாமல் வாயை திறந்தவாறு அதிசயத்துடன் நின்றனர்.

## அத்தியாயம் 18

இன்ஸ்பெக்டர் பென்டன் இன்னும் ஒரு முறை ஹட்டன் வீட்டை நன்றாக சுற்றிப் பார்த்தபின் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். அங்கு ஸ்மித்தை மறுமுறை விசாரணை செய்தார். அவன் முன்பு சொன்னதையே தான் சொன்னான். அவன் திருடிய சாமான்களுள் அநேக மோதிரங்களும் கை கடியாரங்களும் ஒரு வெள்ளிக் கூஜாவும் இருந்தன. அவைகள் அல்லாமல் 100 பவுன்ட் புதிய நோட்டுகள் இரண்டு இருந்தன. அந்த இரண்டும் தன்னுடையது என்று ஸ்மித் வாதித்தான். ஆனால் சாதாரணமாக ஒரு திருடன்

தன் வசம் பணம் இல்லாமல் அவஸ்தைப் பட்டுக் கொண்டு பணம் தேவைப் பட்டால்தான் திருடுவான். கைவசம் பணம் இருந்தால் அது செலவாகும் வரை திருடமாட்டான். இது விஷயம் பென்டனுக்கும் நன்ருக தெரியும்.

"அவைகள் என்னுடையது இன்ஸ்பெக்டர். நான் ஏன் இவ் விஷயத்தில் மாத்திரம் பொய் சொல்ல வேண்டும்" என்று ஸ்மித் சொன்னன்.

"அதெல்லாம் இருக்கட்டும் இவை உன்னுடையது என்ருல் எங்கிருந்து கிடைத்தது?"

"எனக்கு ஒரு சிநேகிதன் கொடுத்தான்" என்று ஸ்மித் விடை யளித்தான்.

"ஹட்டன் வீட்டில் அறையில் குளிருக்காக வைக்கப்பட்ட அடுப்பில் நெருப்பை ஏன் கொளுத்தினுய்?" என்று கேட்கவே, ஸ்மித் எதிர்ப்பாராத இக்கேள்வியைக் கேட்டதும் தயங்கினுன்.

பிறகு "குளிராக யிருந்ததால் நெருப்பை கொளுத்தினேன்" என்ருன்.

இன்ஸ்பெக்டர் "இவன் வசம் 200 பவுண்ட் யிருந்தும் ஹட்டன் வீட்டினுள் திருட நுழைந்து அங்குள்ள நெருப்பை கொளுத்தி குளிர் காய்ந்தானும். நெருப்பை எதற்காக கொளுத்திருக்க வேண்டும்? எதை யாவது எறிக்கத்தானிருக்கும்!" என்று தனக்குத்தானே சொல் வதைப் போல் உறக்க சொல்லிக் கொண்டே சிந்தித்தார்.

இதைக் கேட்ட ஸ்மித் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

"தற்போது நன்ருக விளங்கி விட்டது. உன்னை யாரோ அவ் வீட்டினுள் நுழையுமாறு தூண்டி அவ்வீட்டினுள் ஏதோ ஒரு வஸ்துவை தேடி எடுத்து எறித்து சாம்பலாக்கி விட்டால் உனக்கு 200 பவுண்டு தருவதாக சொல்லி இருக்கலாம். அதன்படி நீ செய்த தால் இந்த 200 பவுண்டு கிடைத்திருக்கும்" என்று இன்ஸ்பெக்டர் சொன்னர்.

"அய்யோ நான் உங்கள் இடத்தில் மாட்டிக் கொண்டேனே நான் இறந்திருந்தாலும் நல்லதாக இருக்குமே" என்று ஸ்மித் கதறினுன்.

"அப்படியாகில் எல்லா பொய் சொல்பவர்களும் சேரும் இடமாகிய நரகத்தில் இருப்பாய். உன்னை தூண்டி உனக்கு பணம் கொடுத்தவர் யார் என்று உடனே தயங்காமல் சொல்லு. இல்லாவிடில் கொலை குற்றத்தை உன் பேரில் சுமத்த நேரிடும்" என்று இன்ஸ்பெக்டர் கடுகடுத்து சொன்னர்.

"கொலையா! அய்யோ நான் ஒரு கொலையும் செய்ய வில்லையே" என்று தலையில் கையைவைத்தவாறு சப்த மிட்டான்.

"ஹட்டன் இறந்து கிடந்தார் தனது படுக்கையின் பேரில். அவ்வளவு போதும்" என்று சொல்லியவாறு இன்ஸ்பெக்டர்அவ் விடத்தை விட்டு வெளியே போய் விட்டார். ஸ்மித்திற்கு மனது குழப்பமாய் விட்டது.

சிறிது நேரத்திற்கு பிறகு இன்ஸ்பெக்டர் மறுபடியும் ஸ்மித் இடம் வந்து கேள்விகள் கேட்க ஆரம்பித்தார். ஸ்மித்தோ தற்போது தப்பித்துகொள்ள உண்மையை சொல்வதையே தவிர வேறு வழியில்லை என்று எண்ணி உண்மையை சொல்ல ஆரம்பித்தான்.

"எனக்கு இரத்த சின்ன சங்கத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. மாரிஸ் பேங்கில் ஒரு பெண் எனக்கு பழக்கம். ஒரு நாள் மாலை அந்த பெண் பேங்கில் அதிக நேரம் வேலை செய்து கொண்டிருந்ததால் நான் அப்பேங்கின் எதிரே தெருவில் நின்று கொண்டு அவளுக்காக காத்துக் கொண்டு இருந்தேன். அச்சமயத்தில் பாங்கின் பக்கத்து வழியில் ஒருவர் வந்து என் பெயரை சொல்லி கூப்பிட்டார். நான் மிகவும் ஆச்சரியத்துடன் அவரை நெருங்கி பார்க்க இன்னும் திகப்படைந்தேன்" என்று ஸ்மித் சொல்லும்போது,

"அவர் மாரிஸ் அல்லவா?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"ஆமாம் ஸார். அவர் என்னை தனது பிரத்தியேகமான அறைக்கு அழைத்து சென்றார். அச்சமயத்தில் நான் அந்த பெண் ஜேனைப் பற்றி ஏதோ குறை சொல்லபோகிறார் என்று நினைத்தேன். ஆனால் அவ் வாறு ஒன்றும் இல்லை. ஹட்டன் இவரை ஏமாற்றி பயமுறுத்துவ தாகவும் அதற்கு காரணமாகிய சில கடிதங்கள் ஹட்டன் வசம் இருப்பதாகவும் அதை நான் எடுத்தால் ஆயிரம் பவுண்டு தருவதாகவும் சொன்னார். அவர் என்னை பற்றி முன்பே விசாரித்து இருந்தார் போல் தெரிந்தது. நான் திருட்டு தொழிலில் தேர்ந்தவனென்றும், இவ்வேலைக்கு நான்தான் பொறுத்தவன் என்றும் சொன்னார். நான் ஒப்புக்கொண்டு ஹட்டன் வீட்டில் நுழைய சந்தர்ப்பம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். எப்பொழுதும் அவ்வீட்டில் வேலைக்காரர்கள் இருந்து வந்ததால் என்னால் அவ்வீட்டினுள் நுழைய வசதி படவில்லை. இதற்கிடையில் பேங்கில் உள்ள இன்னொரு பெண்ணின் மீது ஹட் டன் ஆசையுள்ளவராய் தோன்றினர்"

"அது குலோரியா அல்லவா?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"ஆமாம் ஸார். அவளை ஹட்டன் ஒரு நாள் விருந்திற்கு அழைத் தார். அவ்விஷயம் எனக்கு தெரிந்தும் மிக சந்தோஷமானேன். ஏனென்றால் ஹட்டன் எப்பொழுதும் ஏதாவது ஒரு பெண்ணை தன்

187038

வீட்டிற்கு விருந்திற்கு அழைத்தால் அன்று தன் வீட்டில் உள்ள வேலைக்காரர்களுக்கெல்லாம் லீவு கொடுத்து அனுப்பி விடுவார். அன்று அத்தருணத்தை விடக்கூடாது என்று நான் ஹட்டன் வீட்டில் நுழைந்தேன். இரும்பு பெட்டியை திறந்தேன். அதனுள் ஒரு கவர் இருந்தது. (காகித கூடு) அக்கவரினுள் மாரிஸ் சொல்லியபடி கடிதங்கள் யாதொன்றும் காணோம். ஏதோ ஒரு மலையின் பேரில் ஒரு மனிதனும் ஒரு பெண்ணும் நிற்பதைபோல் ஒரு போட்டோ இருந்தது. அந்த போட்டோ கிராமத்தில் எடுத்ததுபோல் சுற்றி மரம் செடிகள் அதிகம் இருந்தன. அம்மனிதன் அப்பெண்ணை தள்ளுவது போன்றும், அப்பெண் ஒரு மரக்கிளையை பிடித்து சமாளித்து கொண்டு நிற்பதாயும் தெரிந்தது. அது ஏதாவது சினிமாவை சேர்ந்த சினிமா படமாயும் இருக்கலாம் என்று நினைத்தேன். எதற்கும் அதை கொளுத்தி விட்டேன்"

"அவ்வளவு தானு?" என்று இன்ஸ்பெக்டர் கேட்க.

"அவ்வளவுதான். இரும்பு பெட்டியில் யாதும் பணம் இருக்கவும் இல்லை. நான் பணமும் எடுக்க வில்லை" என்று பதிலளித்தான்.

ஏழு மணி. இன்ஸ்பெக்டர் பெண்டன் தம்முடன் இரு போலீஸ் ஆட்களுடன் ஒரு வாரன்டுடனும் மாரிஸ் வசிக்கும் வீட்டிற்கு சென்றார். அங்கு வேலைக்காரன் கதவைத் திறந்து இவர்களை வரவேற்று மாரிஸின் அறையை காண்பித்தான். கதவு மூடப்பட்டிருந்தது. பென்டன் காலால் கதவில் பலமாக உதைக்கவே கதவு திறந்தது. அறை காலியாக இருந்தது. பின்னல் ஜன்னல் கதவு திறக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்த படுக்கை கட்டிலில் அன்று யாரும் படுத்ததாக அறிகுறி இல்லை. அதிக நேரத்திற்கு முன்பே மாரிஸ் தப்பித்து ஓடி இருக்க வேணடும் என்று இன்ஸ்பெக்டர் நினைத்தார். படுக்கைக்கு பக்கத்தில் ஒரு டெலிபோன் இருந்தது. அந்த டெலிபோன் மூலம் டெலிபோன் ஆபீஸிற்கு போன் செய்தார். தான் இன்ஸ்பெக்டர் பெண்டன் பேசுவதென்றும் அன்று இரவு இந்த டெலிபோன் மூலம் ஏதும் பேசினுர்களா என்று கேட்டார். இரு முறை பேசப்பட்டதென்றும் ஒன்று பெய்ஸ் வாட்டர் என்னும் இடத்தில் இருந்து பேசிய தென்றும், இன்னொன்று 2½ மணி சுமார் மேற்கிலுள்ள டெலிபோன் ஆபீஸின் வழியாக பேசப்பட்டதென்றும் பதில் கிடைத்தது. பெய்ஸ் வாட்டரில் இருந்து பேசியது இன்ஸ்பெக்டர் பெண்டன் தான்.

இன்ஸ்பெக்டர் டெலிபோனை வைத்துவிட்டு ஏதோ யோசனையில் மூக்கைத் தடவிக்கொண்டே தங்களுடன் இருந்த போலீஸ் ஆட்களை பார்த்து "குலோரியாவுக்கு இன்னொரு வேலை கிடைக்கலாம்" என்று சொன்னுர்.

(தொடரும்.)

# அஹ்காமுல் முஸ்லிமீன்

(ஹனபி)

கலிமாக்கள், ஈமான், இஸ்லாம், உலு, முழுக்கு, ஹைலு, நிபாஸு, தண்ணீர், தயம்மம், நஜீஸு, தொழுகைகளின் வக்துகள், தொழுகைகளின் வரிசைகள், தொழுகையை விட்டவனுடைய வேதனை, தொழுகையின் பர்லுகள், தொழுகிற ஒழுங்கு, ஜமாஅத்துடன் தொழுகிற வரிசைகள், வித்று தொழுகை, நபில் தொழுகை, தறாவீஹ் உடைய வரிசைகள், ஜும்ஆ உடைய வரிசை, மையித்துடைய விஷயங்கள், ஸகாத்தின் பயான், நோன்புடைய, வரிசைகள், ஹஜ்ஜுடைய வரிசைகள், நபி நாயகம் (ஸல்) அவர்களின் ரவுலா ஷரீபை ஸியாரத்து செய்கிறது ஆகிய இந்த விஷயங்களைப் பற்றி பேசும் பாடங்கள் இதில் நிறைந்திருக்கின்றன.

இவைகள் அல்லாமல் இன்னும் எண்ணற்ற விஷயங்கள் இந்த புஸ்தகத்தின் தக்மிலா என்று சொல்லப்படும் பாகத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ. 1-0-0

ஷை அறபுத் தமிழ் போட்டோ அச்சு கலிகோ பைண்டு ரூ. 1-8-0

ஷை தமிழ் ஷாபி மதுஹபுக்குரியது அறபி வார்த்தைகள் அறபியிலும் சேர்க்கப்பட்டது ரூ. 1-0-0

ஷை அறபுத் தமிழ் போட்டோ அச்சு ஷாபி மதுஹபுக்குரியது கலிகோ பைண்டு ரூ. 1-8-0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# காஜா நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் ஜீவிய சரித்திரம்.

(அய்யம்பேட்டை, S. அப்துல் ரஜாக் ஸாஹிப்)

## (5–வது பகுதி)

**ஹ**ஸ்ரத் ஔலியா அவர்கள் அச்சமயம் பிரக்ஞையற்றிருந்தார்கள். கொஞ்ச நேரத்திற்குப் பின் பிரக்ஞை ஏற்பட்டதும் அந்த சாம்பலைச் சுட்டிக் காட்டி இது என்ன? எனக்கேட்ட போது "ஒருவர், ஸமாவின் போது பெரும் மூர்ச்சிட்டு, அதன் பலனாக வெந்து சாம்பலாகி விட்டார்" என்று விவரிக்கப்பட்ட சமயம் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வரும்படி சொன்னார்கள்.

தண்ணீர் வந்தவுடன் ஹஸ்ரத் அவர்கள் அந்த சாம்பலின் மீது தண்ணீர் தெளிக்கவே இறந்த சூபிக்கு புத்துயிர் உண்டாகி அவர் ஏற்கனவேயுள்ள சரீரத்துடன் எழுந்து உட்கார்ந்தார்.

சூபி உட்கார்ந்ததும் ஔலியா அவர்கள் சூபியை நோக்கி "உம்மில் இன்னமும் ஸமாவிற்கான தேர்ச்சிக்குறை இருந்து வருவதால், அக்குறை நீங்கி உம்முடைய உள்ளத்தில் போதிய சகிப்புத் தன்மை ஏற்படும் வரையில் நம்முடைய ஸமா மஜ்லிசுக்கு நீர் இனிமேல் வரவேண்டாம்" என்று போதித்தார்கள்.

ஒரு தடவை ஹஸ்ரத் ஔலியா அவர்கள் ஹஸ்ரத் சாஜா குத்புத்தீன் பக்தியார்காகி அவர்களின் சமாதியின் தரிசனைக்காக அவர்கள் சமாதிக்குப் போய் திரும்பி வருகையில் ஆற்றோரமாய் பிரபல கவிஞரான மீர் ஹஸன் அலாயி சஞ்சரியைக் கண்டார்கள். அச்சமயம், மீர் ஹஸன் என்பவர், தம் தோழர்களுடன் சேர்ந்து மிக்க மகிழ்ச்சியுடன் சாராயம் குடித்துக் கொண்டிருந்தார்.

அவர் ஹஸ்ரத் அவர்களைப் பார்த்ததும் அச்சந்தர்ப்பத்திற்குரிய பாடலொன்றை பாடினார். அதைக் கேட்டதும் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் "சேர்க்கையின் பயன் உம்மை விட்டும் போய் விடுமோ?" எனக் கேட்டார்கள். அப்போது மீர் ஹஸன் மனதில் அம்மொழிகள் பெரிதும் உணர்ச்சியை உண்டு பண்ணின. அதன் பேரில், அவர், ஓடி வந்து, ஹஸ்ரத் ஔலியா அவர்களின் பாதங்களை முத்தமிட்டு, தாம் இனி மேல், மதுபானம் அருந்தாமலிருப்பதற்கு தவ்பாச் செய்து, ஹஸ்ரத் ஔலியா அவர்களிடம் முரீதும் வாங்கிக்கொண்டார். அவர், தவ்பாச் செய்து சன்மார்க்கத்தை கடைபிடித்த சமயம்

அவருக்கு வயது 72, எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஹஸ்ரத் அவர்களின் அனுக்கிரகப் பார்வை அவரை பரிபூரணமாக்கி விட்டது.

ஷம்சுத்தீன் பஸ்ஸாஸி என்பவர், மிக்க செருக்குப் படைத்தவர். அன்னார் ஹஸ்ரத் ஔலியா விடத்தில் சற்று விரோதங் கொண்டிருந் தார். ஒரு நாள் அவர், 'ஸப்ஸ் மண்டி' என வழங்கப்பட்டு வந்த கடைத்தெருவுக் கருகில் மதுபானத்தை அருந்த எண்ணங் கொண்ட போது திடீரென தமக்கெதிரில் ஹஸ்ரத் ஔலியா அவர்கள் நின்று கொண்டு, 'சீ! அதை குடிக்காதே' என தம் கையால் சகிக்னைச் செய் வதை கண்டார். ஹஸ்ரத் அவர்களின் கண்பார்வையில் அவரு டைய பார்வையும் அச்சமயம் ஒன்றாய் தரிபட்டது. உடனே அவர் தம் மதுபான பாத்திரங்களை யாவும் தூக்கிப் போட்டு உடைத்ததும், ஹஸ்ரத் ஔலியா அவர்களிடம் ஓடி வந்து "நல்லதிர்ஷ்ட மிருந்தால் யாதொரு சீர்திருத்தச் சம்பவம் எப்போதேனும் நேரிட்டுவிடும், என்று தாங்கள் சொல்லி வந்தீர்களே அதன் பிரகாரம் இன்று என் கொள்கைகளில் சீர்திருத்தம் ஏற்படலாயிற்று" என்று முறையிட்ட பின்னர் ஹஸ்ரத் அவர்களின் சமுகத்தில் முரீது பாக்கியத்தையும் அடையப்பெற்றார்.

ஹஸ்ரத் ஔலியா அவர்களின் யாதொரு முரீதுடைய வீட்டில் ஒரு நாள் 'ஸமா' நடைபெற்றது. ஸமாவின் பொருட்டு அந்த வீட்டுக்காரர் எல்லோருக்கும் சாப்பாடு விருந்து வைக்கவும் ஏற்பாடு செய்திருந்தார்.

ஆனால், ஸமாவில் எதிர்பாரா வண்ணம் சூபிமார்களும், பிரமுகர் களும் ஏனைய மக்களும் ஆயிரக்கணக்கில் வந்து கூடி விட்டமையால் தயாரித்த சாப்பாட்டை யாருக்கிடை வைப்பது எனத் தெரியாமல் வீட்டுக்காரர் திகைத்துப் போனார். ஹஸ்ரத் ஔலியா அவர்கள் தம் அந்தரங்க சக்தியைக் கொண்டு அதனை யறிந்து காஜா முபஷ்ஷிர் நாமமுள்ள பிரதம வேலைக்காரரை கூப்பிட்டு பின்வருமாறு ஆலோசனைக் கூறினார்கள் :—

"விருந்தினரை பந்தியில் உட்கார வைத்து கைகழுவச் செய்ததும் ஒரு ரொட்டியை நான்கு துண்டுகளாக்கி, அதை போர்வைக்குள் வைத்து 'பிஸ்மில்லா' ஓதியபின் அவைகளை விருந்தினருக்கு முன்னு ளுள்ள தட்டு பாத்திரத்தில் பகிர்ந்த வண்ணம் வைத்துக் கொண்டு போகவும்"

அவ்வாறே செய்யப்பட்ட போது 50 பேருக்கு சமைக்கப்பட்ட சாப்பாடு (ரொட்டி) ஆயிரக்கணக்கான விருந்தாளிகளையும் சமாளித்துக் கொண்டது.

ஒரு தடவை 'ஸமாவா' என்ற கஸ்பாவில் உள்ள ஜாகீர்தார் ஒருவர் வீடு தீ விபத்திற் குள்ளாயிற்று. சர்க்கார் சார்பாக அவருக்கு கொடுக்கப் பட்டிருந்த மான்னிய தஸ்தாவேஜூம் தீ விபத்தினல் எரிந்து சாம்பலாய் போய் விட்டதனல், பாவம்! அந்த வீடு இழந்தவர் அந்த தஸ்தாவேஜின் நகலொன்றை பெறுவதற்காக டில்லிக்கு வந்தார். புதிய தோரணையில் அரும்பாடு பட்ட பின்னர் அதன் பிரதி யொன்று அவருக்கு கிடைத்தது.

ஆனல் சுல்தான் உடைய ஆபீஸிலிருந்து அவர் அதை பெற்றுக் கொண்டு வெளி வந்ததும் தம் அஜாக்கிரதையினல் அதை எங்கேயோ நழுவ விட்டு மீண்டும் அதை இழந்து போனர். பிறகு எங்கெங்கேயோ தேடிப் பார்த்தும் கிடைக்காமற் போகவே, கடைசியாக அழுது கொண்டு ஹஸ்ரத் ஔலியா அவர்களின் சமூகத்திற்கு வந்து முறையிட்டார். மேலும் அது கிடைக்கும்படி துவா செய்யுமாறும் வேண்டிக் கொண்டார்.

அதை செவியுற்ற ஹஸ்ரத் ஔலியா அவர்கள் புன்னகைப்புடன் "நீர் கடைக்குப் போய் ஹல்வா வாங்கி வந்து அதை பாபா சாஹிப் ஔலியாவின் பெற்றோர் பெயரால் பாத்திஹா ஓதும். அந்த தஸ்தாவேஜு கடுதாசி உமக்கு கிடைத்து விடும்" என்று உபதேசித்தார்கள். ஆதலால் உடனே, அவர் கடைத் தெருவுக்குப் போய் ஆச்சிரமத்திற்கு சமீபமாகவே நிலை கொண்டிருந்த ஓர் ஹல்வா கடையில் ஹல்வா வாங்கினர்.

அவர் கேட்ட அளவின் ஹல்வாவை தராசில் நிறுத்திய பின்னர், அதை கட்டிக் கொடுப்பதற்காக கடைக்காரன் கடுதாசி யொன்றை கையிலெடுத்து அதை கிழிக்கச் சென்ற போது அந்தோ! அதுவே இழந்தவரின் தஸ்தாவேஜு நகல் கடுதாசி எனத் தெரிந்தது.

உடனே அவர் "ஓகோ! அதை கிழித்து விடாதே" என்று கதறினர். அப்பால், அவர் ஹல்வாவையும், தஸ்தாவேஜு கடுதாசியை யும் தனித்தனியே கொண்டு வந்து ஹஸ்ரத் ஔலியா அவர்களின் சமூகத்தில் சமர்ப்பித்து அவர்களைப் போற்றி தானும் அவர்களது முரீதாகி விட்டார்.

சுல்தான் அலாவுத்தீன் கில்ஜி என்பவர், ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களை எப்படியாவது தம்மிடத்திற்கு அழைக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டு ஒருவர் வாயலாய் பின் வருமாறு செய்தி சொல்லி யனுப்பினர் :—

"முக்கியமான தோர் யுத்த களத்திற்குச் சென்ற என் போர் வீரர்களைப் பற்றி யாதொரு தகவலும் எனக்குக் கிடைக்க வில்லை.

அவர்கள் புறப்பட்டுப் போய் நீண்ட நாளாகிறது. எனக்கு எந்நேரமும் அதே கவலையாக யிருப்பதால் தாங்கள் தயை கூர்ந்து சொற்ப நேரத்திற் கேனும் என்னிடத்திற்கு விஜயஞ் செய்தால் தங்கள் பேருதவியாகும்" ஹஸ்ரத் அவர்கள் அச்செய்தியைக் கேட்டதும் சிறிது நேரம் வரையில் தலை குனிந்து பேசாதிருந்தார்கள்.

பின்னர் தலையை நிமிர்த்தி "நான் அங்கே வரவேண்டும் என்ற அவசியமில்லை. இன்ஷா அல்லா நாளை விடியற்காலை உங்களுக்கு அது பற்றி தகவல் கிடைத்து விடும். போர்க்களத்திற்குச் சென்றிருக்கும் உங்கள் சகோதரன் 'அலிப்கான்' பூரண சரீர சௌக்கியத்துடனேயே விரோதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட சாமான்களுடன் பெரும் மகிழ்ச்சியோடுங்கூடி உங்களை சந்திக்க வருவான்" என்று பதிலனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் ஔலியா அவர்கள் சொல்லி யனுப்பிய பிரகாரமே, மறுதினம் அலிப்கான் குதூகலமான வெற்றியின் மகிழ்ச்சியுடனே தர்பாருக்கு வந்து சுல்தான் சேவையில் அமர்ந்தார். சுல்தானும் தம் சகோதரரின் அபார வெற்றிக்காக அளவிலா மகிழ்ச்சியுற்று 5000-தீனார் நாணயங்களை ஷய்க் அவர்கள் சமூகத்திற்கு காணிக்கை அனுப்பித் தந்தார். அத்தொகை கிடைத்த சமயமே 'அஸ்பந்துயார் கலந்தர்' என்ற கலந்தர் பகீர் ஹஸ்ரத் அவர்கள் சமூகத்திற்கு வந்து விட்ட படியால் ஹஸ்ரத் அவர்கள் அந்த தொகை முழுவதையும் அவருக்கு கொடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஔலியா அவர்களுக்கு நிக்காஹ் ஆகவில்லை. ஆயுள் முழுவதையும் தன்னந்தனியாகவே கழித்தார்கள். இதையொட்டி ஆராய்ந்தறிந்தோர் அடியில் வருமாறு கூறியுள்ளார்கள்:—

ஒரு நாள் ஹஸ்ரத் ஔலியா அவர்கள், அஜூத்ஹனில் இருந்து வந்த சமயம் அவர்கள் முர்ஷித் அவர்கள், சாப்பிடுவதற்காக ஏதேனும் ஆகாரம் கொண்டு வந்து கொடுக்குமாறு ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியாவுக்கு உத்தரவு செய்தார்கள்.

அதன் பேரில், ஹஸ்ரத் ஔலியா அவர்கள், தம் தலைப்பாகையை அடகு வைத்து அந்த பணத்திலிருந்து தட்டப்பயிறும், உப்பும் விலைக்கு வாங்கி தட்டப்பயிறுடன் உப்பை போட்டு அவித்து, அதை கொண்டு போய் முர்ஷித் அவர்களுக்கு எதிரில் வைத்தார்கள்.

முர்ஷித் அவர்கள், அச்சமயம் அங்கு வீற்றிருந்த தோழர்களுடன் சேர்ந்து, அதை புசிக்கத் தொடங்கினார்கள். புசிக்கும் சமயத்தில் “நிஜாமுத்தீன் இதில் உப்பையும் போட்டு எவ்வளவு நன்றாய் அவிழ்த்துக் கொண்டு வந்திருக்கிறார். ஆனதுபற்றி, அவரது ‘லங்கர்கானா’ (அன்னதான நிலையம்) விலிருந்து அனுதினமும் 73 மணங்கு உப்பு செலவாகும் அந்தஸ்து ஏற்பட வேண்டுமென நான் எல்லாம் வல்ல இறைவனிடம் துஆச் செய்கிறேன்” என்று ஆசிர்வதித்தபோது ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் எழுந்து நின்று ஸலாம் செய்தார்கள். ஹஸ்ரத் ஒளலியா அவர்கள், தம் முர்ஷிதிற்கு சலாம் செய்ய எழுந்திருந்த போது அவர்களது கால் சல்லடம் கிழிந்திருந்ததாக முர்ஷித் அவர்களுக்குத் தெரிந்தது. அவ்வாறு தெரியவே, முர்ஷித் அவர்கள், அதே சமயம் தம்முடைய சல்லடத்தைக் கொடுத்து அதை அணியச் சொன்னார்கள்.

ஹஸ்ரத் ஒளலியா அவர்கள் அச்சல்லடத்திற்கு கௌரவப்படுத்தும் நோக்கத்துடன் அதை ஏற்கனவேயுள்ள தம் சல்லடத்திற்குமேல் அணிந்தார்கள்.

ஆனால் அவர்கள் அதை அவசரப்பட்டு அணிந்ததன் காரணமாக சல்லட நாடாவின் ஒரு தலைப்பு சல்லடத்தின் ஒரு துவாரா வழியே வெளிவந்து விட்டது. அதைக் கண்ட முர்ஷித் அவர்கள் “சல்லட நாடாவை இறுக்கமாகக் கட்டும்” என்று சொன்னபோது “இன்ஷா அல்லா அப்படியே கட்டுகிறேன்” என்று ஹஸ்ரத் அவர்கள் பதில் கூறினார்கள்.

இதிலிருந்து நாடா கட்டுக்கடாங்காமல் உருவிப்போனதானது அவர்களும் மனைவியைக் கட்டிக் கொள்ளப் போவதில்லை என்ற அறிகுறியாகும் என சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்.

(தொடரும்.)

87038

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# தஸ்பீஹ் மணிகள் கிடைக்கும்.

எம்மிடம் பலவித தஸ்பீஹ்கள் ரொக்கத்திற்கு விற்கப்படுவதுடன் வி. பி. பி. மூலமாகவும் அனுப்பப்பட்டு வருகின்றன. தேவையுள்ளோர் கீழே குறித்த விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| மரத்தால் செய்யப்பட்டது: | சிறியது : | அணா. | 6 |
| ஷை | நடுத்தரம் : | அணா. | 6 |
| நகல் கஹ்ரூபா தஸ்பீஹ் : | | | |
| உருண்டையான மணி | சிறியது : | அணா. | 8 |
| ஷை | பெரியது : | அணா. | 12 |
| நீளமான மணி | சிறியது : | ரூ. | 0–14–0 |
| ஷை | நடுத்தரம் : | ரூ. | 1–0–0 |
| ஷை | பெரியது : | ரூ. | 1–8–0 |
| ஷை | ஏக பெரியது : | ரூ. | 2–8–0 |
| ஒட்டகப் பல் : | சிறியது : | ரூ. | 1–8–0 |
| ஷை | நடுத்தரம் : | ரூ. | 2–8–0 |
| நகல் ஒட்டகப் பல் உருண்டை மணி | சிறியது : | அணா. | 8 |
| | நடுத்தரம் : | அணா. | 12 |
| | பெரியது : | அணா. | 14 |
| ரோஸ் நிறம் தஸ்பீஹ் உருண்டை மணி | சிறியது : | அணா. | 8 |
| | பெரியது : | அணா. | 12 |
| சந்தன மரக்கட்டை தஸ்பீஹ் | | | |
| | சிறியது : | அணா. | 12 |

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

# இனாம்! இனாம்!!

## ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர் 1955.

இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ் ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்களிடமிருந்து ஒரே நேரத்தில் எங்களது சொந்த பிரசுரங்களுள் ரூபாய் 10க்கு குறைவில்லாமல் சொந்த உபயோகத்திற்கு கிதாபு, புஸ்தகம் தருவிப்பவர்களுக்கு ஷை காலண்டர் ஒன்று (எங்களிடம் காலண்டர் ஸ்டாக் யிருக்கும் வரை) இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.